Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி– 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற–ஆகிர் 17 (26.05.2005) வியாழக்கிழமை இதழ்:239

## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நாளை பூரண ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றக் கோரி – நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய மாணவர் மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும் அதனை அகற்றுவதற்கு சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.


தமிழினத்தின் இருப்புக்கான ஆணிவேர்களான இன,மத,தனித்துவங்களை சிதைக்கும் நோக்கத்துடன் சிங்கள பௌத்த வெறிபிடித்தவர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். இதனைத் தமிழ் மக்கள் தடுத்து நிறுத்தாவிட்டால் தமிழ் மக்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் என்பதற்கு தடயம் எதுவுமில்லாது ஒழிக்கப்படும் பரிதாபநிலை உருவாகும்.

தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த திருகோணமலை மாவட்டம் இன்று பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள பரிதாப நிலை உருவாகியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாலதி படையணியின் ஒன்றுகூடலில் தேசியத் தலைவர் பங்குபற்றினார்!

(கிளிநொச்சி)



மாலதி படையணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு ஒன்று கூடலில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி ஏற்றிவைத்தார். மாவீரர்களுக்கான ஈகச்சுடரை தேசியத் தலைவர் ஏற்றி மலர்மாலையையும் அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து 2 ஆம் லெப்டினன்ட் மாலதி படையணியினரால் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய போராளிகளுக்கான பரிசில்களையும் தேசியத் தலைவர் வழங்கிக் கௌரவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் மீதான இனக்கலவர முயற்சி ஆபத்தான சூழலை ஏற்படுத்தும்!

### தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயப்படுத்தும் வகையில், சிங்கள ஆக்கிரமிப்பின் குறியீடாக புத்தர் சிலைகளை நிறுவி – மக்களின் உணர்வுகளைச் சிதறடித்து தமிழ்மக்கள் மீது இனக்கலவரத்தைத் தூண்டிவிடும் செயலில் அரச படைகளும் சிங்கள இனவாதிகளும் இறங்கியுள்ளனர்.

இது மிகவும் ஆபத்தான சூழலை நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்போகிறது என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.


கிளிநொச்சியில் நேற்று ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வுட்ரோவில்சன் மற்றும் நெதர்லாந்துத் தூதுவர் சுசான் பிளாங்கட் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவரையும், நெதர்லாந்து தூதுவரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம். இந்தச் சந்திப்பில் முக்கியமாக தற்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலை பற்றியும் எமது தரப்பு நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டியுள்ளதன் அடிப்படையில் இன்றைய கலந்துரையாடல் நடந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பியத் தூதுவர்கள் கிளிநொச்சிக்கு விஜயம்!



(கிளிநொச்சி)

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வுட்ரோவில்சன் மற்றும் நெதர்லாந்துத் தூதுவர் தசான் பிளாங்கட் ஆகியோர் நேற்றுப் பேச்சுக்களை நடத்தினர்.

நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை புத்தர்சிலை தொடர்பாக

## இறுதி முடிவினை எடுப்பதற்கு 2 ஆம் திகதிவரை காலக்கெடு!

(திருகோணமலை)



திருகோணமலை நகரின் மத்தியில் கடந்த 15 ஆம் திகதி திடீரென வைக்கப்பட்ட புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றுமாறு திருமலை நீதிவான் நீதிமன்றம் விடுத்த உத்தரவை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக திருமலை நகரசபையின் விசேட ஆணையாளருக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொடுப்பதெனவும், இதனூடாக சிலை தொடர்பான இறுதிமுடிவை மேற்கொள்வதெனவும், நேற்று, திருகோணமலையிலுள்ள வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வைத்தியசாலையில் சூரியமூர்த்தி உயிரிழந்தார்!

(கொழும்பு)

திருகோணமலை நகரசபை முன்னாள் தலைவரான பெ.சூரியமூர்த்தி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று அதிகாலை மரணமானார்.

கடந்த 18 ஆம் திகதி திருகோணமலையில் வைத்து இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இவர் – திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு – பின்னர் அவசரசிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டார்.

இரத்தப்பெருக்கு கட்டுப்பாடில்லாமல் இருந்த இவர், நேற்று அதிகாலை 5.10 மணியளவில் மரணமானார். 57 வயதான இவர், கடந்த தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஆனந்தசங்கரியின் சுயேட்சைக்குழுவில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

1970 களின் பிற்பகுதியில் தமிழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் நிலைமை குறித்து

## ஜே.வி.பி. தலைவர்களுடன் சந்திரிகா ஆலோசனை!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு குறித்து ஜே.வி.பி சமர்ப்பிக்கவுள்ள ஆலோசனைகள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி யினருக்குமிடையே நாளை விசேட கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடல் தீர்க்கமானதாக இருக்கமென கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெறும் கலந்துரையாடலில் எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரகேசரி ஆசிரியருக்கு கொலை அச்சுறுத்தல்!

(கொழும்பு)



வீரகேசரி வார இதழின் ஆசிரியர் வி.தேவராஜுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வீரகேசரியின் இணை ஆசிரியருக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டுமென்றும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பினர் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு கடிதம் ஒன்றையும் ஊடகவியலாளர்களுக்கான அமைப்பு அனுப்பி வைத்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை பிரதேச செயலராக வரதீஸ்வரன் பதவியேற்றுள்ளார்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலராக வரதீஸ்வரன் நேற்று முதல் பொறுப்பேற்றுக் கொண்டார். இதன் மூலம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சில மாதங்களாக நிலவி வந்த பிரதேச செயலருக்கான பதவி வெற்றிடம் பூர்த்தி செய்யப்பட்டுள் ளது.

பருத்தித்துறை பிரதேச செயலராக இருந்த சிவசுவாமி - யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த பத்தினி அம்மா ஓய்வு பெற்றதன் பின்பு மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். ஆயினும், அந்தப்பதவியில் இருந்து கொண்டு பருத்தித்துறை பிரதேச செயலக செயற்பாடுகளையும் கண்காணித்து வந்தார்.

தற்போது பருத்தித்துறை பிரதேசசெயலகத்தின் செயலராக வரதீஸ்வரன் நேற்று செயலகப் பணிகளை ஆரம்பித்துள்ளார். இவர் முன்னர் மன்னார் பிரதேச செயலகத்தில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## திருஞான சம்பந்தர் குருபூசை நிகழ்வு

(கிளிநொச்சி)

இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகம், திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளின் குருபூசைதினத்தை சிறப்புடன் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

இன்று பி.ப 3.30 மணிக்கு இராமநாதபுரம் மாவடி சிறிமாரி அம்மன் கோவிலில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள், கரைச்சிப்பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம், கரைச்சி உதவி அரச அதிபர் சுலோஜினி, கிராம அலுவலர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஐந்து மாதிரிப்பரீட்சை!

(வடமராட்சி)

வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனை முன்னிட்டு வலயமட்டத்தில் ஐந்து மாதிரிப் பயிற்சிப் பரீட்சைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன் பிரகாரம் முதலாவது பரீட்சை இம்மாதம் 19 ஆம் திகதி நடைபெற்றது. ஏனைய பரீட்சைகள் ஜுன் மாதம் 9 ஆம், 23 ஆம் திகதிகளிலும், ஜுலை மாதம் 7 ஆம், 28 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை வினாத்தாள்கள் வலயமட்ட ஆரம்பக் கல்விப்பிரிவினரால் தயாரிக்கப்பட்டுள்ளன. (122)


### சிறுவிளம்பரம்

**SPOKEN ENGLISH**

ஓய்வுபெற்ற ஒருவரினால் வெளிநாடு செல்பவர்கள், உத்தியோகத்தர்களுக்கு அடிப்படையிலிருந்து இலகு முறையில் விரைவாக ஒலிநாடா, சீ.டி உதவியுடன் வீட்டிற்கு வந்து பேச்சு ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்பு: இல.06, மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய் தொலைபேசி 021-4591 001 (1171)


## மாணவர்களுக்கு சைக்கிள் அன்பளிப்பு

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு, கியூமெடிக்கா நிறுவனத்தினர் துவிச்சக்கர வண்டிகளை வழங்கிவருகின்றனர்.

இந்த நிறுவனம் கடந்த சில நாட்களில் 250 துவிச்சக்கர வண்டிகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. மேலும் 750 துவிச்சக்கர வண்டிகளை விரைவாக வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(122)


**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல்
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி
நடித்த
**சூர்யா**
ஆக்ஷன் படம்
பு.நே: 10.30, 2.30, 6.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில் (C/3979)



சந்திரமுகி
50 ஆவது நாளை நோக்கி...
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ஷாம்,றிச்சர்ட் பலேட் நடித்த
**கிரிவலம்**
பஸ் போக்குவரத்து
பாதை இல 782 – காரைநகர்/787
மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

**ராஜன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது),

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா
ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

சரத்குமார்,
அறிமுகம் ரமேஷ்,
பூஜா,
கலாபவன் மணி
மற்றும்
பலர் நடித்த
ஜிதன்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30


### யாழ்.போதனாவைத்தியசாலையில்

## உரிமைகோரப்படாத நிலையில் நான்குபேரின் சடலங்கள்

நெடுந்தீவில் கரையொதுங்கிய நான்குசடலங்கள் இதுவரை இனங் காணப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழகத்திலிருந்து நாடு திரும்பிய ஈழத்தமிழ் அகதிகளின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 7 பேர் காணாமல் போயிருந்தனர். நெடுந்தீவு கடற்கரையில் கரையொதுங்கிய சடலங்கள் நெடுந்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

எனினும், அவற்றில் நான்கு பேரின் சடலங்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்கள் இரண்டு தினங்களுக்குள் உரிமை கோரப்படாவிடின், அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


சௌகரியமான, பாதுகாப்பான உண்மையான திரில்
புத்தம் புதிய மோட்டார் சைக்கில்கள்
**DAIDO AND YAMATO**
*Born to Lead*

CF90-C Super Cub



CF100-9



CF70-Q CF90-Q



XF100-S



*1 வருட உத்தரவாதம் அல்லது 10,000K.M. 4 ஸ்ட்ரோக் என்ஜின்
* லீட்டருக்கு 50-75 கி.மீ. (சீரான போக்குவரத்து முறையில்)
* கீழ் தள்ளி மற்றும் தன்னியக்கி
* 12V பட்டரி * விற்பனைக்கு பிந்திய 3 சேவைகள்
* கண்கவர் வர்ணங்களுடன் புதிய ரகங்களில்

**இலவசம்!** தலைக்கவசம், மேலங்கி மற்றும் கருவிகள்
உதிரிப்பாகங்களுக்கு நாடளாவிய ரீதியில் உள்ள
எமது விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக இறக்குமதியாளர்:
**செரண்டிப் மோட்டர் எண்டபிறைசஸ் (பிறை.) லிமிட்.**
60-B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை.: 011-2341580-1, 2438779 தொ.நகல்: 011-2454608



## கரம்பொன் ஊர் அன்னை வேளாங்கன்னி ஆலயப் பெருவிழா



### அன்னையின் பக்தகோடிகளே!

அன்னையின் 2005ம் வருட திருவிழா 22.05.2005 மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் செபமாலையும் திருப்பலியும் இடம்பெறும். 28ம் திகதி மாலை திருப்பலியும் நற்கருணை ஆராதனையும், 29ம் திகதி காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். வேளாங்கன்னித் தாயின் பக்தர்களே கொடூர இடம்பெயர்வுகளால் சிதறுண்டு இருக்கும் எங்களுக்கு அன்னையின் பருந்துரை குறைவின்றிக் கிடைக்கும்படியாக திருவிழா நிகழ்வுகளில் கலந்து செபிக்க அன்போடு அழைக்கின்றோம்.

தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். பூரண பாதுகாப்பு உண்டு. உதவிகள் செய்ய விரும்புவோர் பங்குத் தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்.

**பங்குத் தந்தையும், பங்கு மக்களும்**
**அர்ச்.செபஸ்ரியார் ஆலயம்,**
**கரம்பொன்,**
**ஊர்காவற்றுறை.**

(C/4135)

# வடக்கு-கிழக்கு மாகாண புனர்நிர்மாணத்தில் புலிகளை கண்டிப்பாகச் சேர்க்கவேண்டும்!

## ஐ.தே.க. வலியுறுத்துகிறது

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு ஐ.தே.கட்சி தனது ஆதரவினை வழங்கும். அத்துடன் வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் புனர்நிர்மாணப் பணிகளில் விடுதலைப் புலிகள் கண்டிப்பாக ஈடுபடுத்தப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே ஐ.தே.கட்சி உள்ளதென முன்னாள் சபாநாயகரும், ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

தேசிய அரசியல் கல்விப்பீடம் மற்றும் ஜெயவர்த்தன நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கட்டமைப்பு மரணப் பொறியா? என்ற திறந்த கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தனதுரையில் -

இந்த நாட்டின் நன்மை கருதி அரசாங்கம் முன்னர் சமர்ப்பித்த எந்தவொரு திட்டத்துக்கும் ஐ.தே.கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் விடுதலைப் புலிகளின் பூரண ஆதரவு கிடைத்துள்ளதனை நாம் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஆனால், பொதுக்கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் குறித்தே சிக்கல் நிலை தோன்றியுள்ளது. பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கம் முழுமையாக தெளிவுபடுத்தவேண்டும். ஜே.வி.பி. உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகலரதும் பொது உடன்பாட்டுடன், இந்தப் பொதுக்கட்டமைப்பு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஆனால், பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது நாடு பிளவுபடாமல் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதெனில், ஜே.வி.பி. அரசில் இருந்தாலென்ன அல்லது விலகினாலென்ன இது தொடர்பில் ஐ.தே. கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் நிர்வாகத்தை முழுமையாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதனை ஐ.தே. கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் ஜனாதிபதி சமர்ப்பிக்கவுள்ள பொதுக்கட்டமைப்பு, அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மட்டுமே தொடர்புபட்டதாக உள்ளது. எனவே, இது குறித்து திறந்த கலந்துரையாடலை மேற்கொள்வது அவசியமாகும். இதன்பின்னர் நாம் தீர்மானமொன்றுக்கு வரமுடியும்.

ஆயுதங்களை வைத்திருக்கும் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடலை நடத்தமுடியாதென சிலர் கூறுகின்றனர். அவ்வாறெனில் ஜே.வி.பி. ஆயுதங்களை ஒப்படைத்த பின்னரா ஜனநாயகத்துக்கு வந்தது. அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் இருக்கின்றபோது, விடுதலைப் புலிகளும் ஜனநாயகத்துக்கு வருவதற்கு எவ்வித தடையுமில்லை.

ஜே.வி.பி. மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் ஆயுத பாணிகளாகவே முன்னர் கிளர்ச்சியில் ஈடுபட்டன. இன்று இந்தக் கட்சிகள் அரசுடன் இணைந்ததன்மூலம் ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்துள்ளன. இந்தப் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்துவன்மூலம் விடுதலைப் புலிகளையும் ஜனநாயகப் பாதைக்குக் கொண்டுவரமுடியுமென நாம் நம்புகின்றோம்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் புனர்நிர்மாணச் செயற்பாட்டை அரசாங்கம் பயனுடையதாக செய்துமுடிக்க வில்லை. தற்போது சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து நான்கு மாதங்கள் கடந்தநிலையிலும் அந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர் முகாம்களிலேயே உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குச் செல்ல அரசினால் முடியாது. எனவே வடக்கு-கிழக்கு மக்களின் இயல்பு வாழ்வை மீளக்கொண்டுவர பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். இதன்மூலம் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தமுடியுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அடுத்தவாரம் பேரணி!

(கொழும்பு)

ஆசிரிய சேவையிலுள்ள சம்பள முரண்பாடுகள், பதவியுயர்வுகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கோரி - ஜனாதிபதி மாளிகை நோக்கி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி விகாரமாதேவி பூங்காவில் இருந்து ஆரம்பமாகும் பேரணி ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக முடிவடையும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடெங்குமிருந்து - இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பங்குபற்றுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகளில் ஜே.வி.பியின் ஆசிரிய சேவைகள் தொழிற்சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் ஈடுபட்டுவருகின்றன.

## தென்மாகாணத்தில் பொலிஸார் பெரும் தேடுதலுக்குத் திட்டம்!

(கொழும்பு)

தென்மாகாணத்தில் பாதாள உலகக்குழுக்கள் மற்றும் குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்கான பாரிய தேடுதல் நடவடிக்கைகளை அடுத்தமாதம் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதி இந்தப் பாரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஒப்பரேசன் கிளீன் - அப் எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த நடவடிக்கைக்கென கொழும்பிலிருந்து ஆயிரம் பொலிஸார் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

பாதாள உலகக் குழுக்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போரை கைது செய்வதே அந்த நடவடிக்கையின் நோக்கம் என பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## தனியார்துறை சம்பள உயர்வு அடுத்தமாதம் முதல் அமுல்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தில், தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் அத்தாவுட செனிவிரத்ன நாடாளுமன்றில் அடுத்த மாதம் இது தொடர்பான பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதன்படி மாதாந்தம் 20000 இற்கும் குறைவான சம்பளத்தைப் பெறுபவருக்கு ஆயிரம் ரூபாவாலும், நாளாந்த சம்பளம் பெறுபவருக்கு 40 வீதத்தாலும் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள அமைச்சர் பரிந்துரை செய்வார்.

இந்த பிரேரணை தற்போது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அனுமதி கிடைத்துவிடுமெனவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## அடுத்தமாத இறுதிக்குள்

# நிரந்தர நியமனம் வழங்காவிடின் நாடு தழுவிய போராட்டங்கள்!

## பட்டதாரி பயிலுனர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அடுத்தமாத இறுதிக்குள் தாம் தற்போது பணியாற்றும் இடங்களில் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்காவிடின், அரசாங்கத்துக்கு எதிராக நாடுதழுவிய ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக பட்டதாரிப் பயிலுனர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அண்மையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட 42 ஆயிரம் பட்டதாரிகள் தற்போது அரசாங்க நிறுவனங்களில் பயிலுனராக பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் தமக்கு அடுத்த மாத இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்காவிடின் நாடுதழுவிய போராட்டதில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போது பணியாற்றும் நிறுவனங்களிலிலேயே நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், போட்டிப்பரீட்சை மூலம் நிரந்தரநியமனத் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்றும் பட்டதாரிகள் பயிலுனர் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்குள் ஈர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளை அடுத்தமாத இறுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாம்பிட்டிய தெரிவித்தார்.

கடந்தவார இறுதியில் நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டபின் இதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை பெறுபேறுகளை கூடிய விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாக பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாம்பிட்டிய தெரிவித்தார்.

# பாடசாலைகளின் முகாமைச் செயற்பாடுகளை சபையொன்றிடம் ஒப்படைக்க நடவடிக்கை!

(கொழும்பு)

பாடசாலைகளின் முகாமைத்துவ நடவடிக்கைகளை சபையொன்றிடம் ஒப்படைக்கும் நோக்கில், பாடசாலைகளில் முகாமைத்துவ சபையொன்றை அமைப்பதற்கு கல்வியமைச்சிடம் 200 கோடி ரூபாவை வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த முகாமைத்துவ சபையொன்றை அமைப்பது தொடர்பான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகள் பல தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் தேசிய கல்வி நிறுவனத்தின் வழிநடத்தலில் இந்தச் சபை அமைக்கப்படும். பாடசாலைகளில் முகாமைத்துவ சபை நிறுவப்பட்ட பின்னர், பாடசாலைகளின் அனைத்து நடவடிக்கைகளும், இந்தச் சபை மூலமே செயற்படுத்தப்படவுள்ளதாகவும், அதற்கமைய பாடசாலைகளின் நிர்வாகம், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடுவதும் இதன்மூலம் நிகழுமெனவும், தேசிய கல்வி நிறுவன சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் மற்றும் பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் இந்தச் சபையின் உறுப்பினர்களாவர். உலக வங்கியின்மூலம் கிடைக்கும் நிதிகள் அந்தந்த பாடசாலைகளின் தராதரங்களுக்கேற்ப ஒப்படைக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட நிதி நடவடிக்கைகள் இந்தச் சபைகளின் மூலம் நிர்வகிக்கப்படும்.

பாடசாலைகளில் முகாமைத்துவ சபையை அமைப்பதற்கு கடந்த பல வருடங்களாக கல்வியமைச்சின் மூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும், இதற்கு பல்வேறு அரசியற் கட்சிகளும், மாணவர் அமைப்புக்களும் எதிர்ப்பினைத் தெரிவித்ததனால், இது செயற்படுத்தப்படுவது தாமதமாகிவந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

## பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

விசேட தேவை உடையவர்களுக்கான புனருத்தாரன வேலைத்திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்று நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் சமூகசேவை உத்தியோகத்தர்கள் ஏற்கனவே பயிற்சிபெற்ற சி.பி.ஆர் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தேசிய பாடசாலை விண்ணப்பங்களை உறுதிசெய்ய புதிய வேலைத்திட்டம்!

அடுத்தவருடம் முதலாம் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக தேசிய பாடசாலைகளுக்கு கிடைத்த விண்ணப்பங்களை உறுதி செய்துகொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.


இதனடிப்படையில் சகல விண்ணப்பப் படிவங்களும் மாவட்ட அடிப்படையில் பிரிக்கப்பட்டு கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்து கிடைத்த விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்கள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், விண்ணப்பிக்கப்பட்டுள்ள பாடசாலை, விண்ணப்பதாரிகளின் வதிவிடத்திலிருந்து பாடசாலை அமைந்துள்ள தூரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான விசேட செயற்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தபால் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சில விண்ணப்பதாரிகளின் வதிவிடம் உட்பட ஏனைய தகைமைகளை உறுதிசெய்ய சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படி விசேட விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. இதன்போது பதிவாளர் நாயகம் திணைக்களம், தேர்தல் ஆணையாளர் அலுவலகம், பொலிஸ் திணைக்களம் உட்பட ஏனைய முக்கிய திணைக்களங்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்

# மேற்கிந்திய அணியில் லாரா!



(செயின்லூஸியா)

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் பிறையன் லாரா மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

பார்படோஸில் இந்த வாரம் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டியில் பங்கேற்கும் 13 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 115 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள லாரா, பாகிஸ்தானுக்கு எதிராக நடந்து முடிந்த 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் ஓய்வு வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தொடரை பாகிஸ்தான் 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 47 ஆண்டுகளுக்குப் பின் பாகிஸ்தான் இத்தகைய வெற்றியைப் பெற்றுள்ளது.

இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மாற்றங்கள் அவசியம் என்று அந்நாட்டு அணி உணர்ந்துள்ளது.

அணியில் லாரா இடம்பெற்றால் மற்ற வீரர்களுக்கும் உற்சாகமாக இருக்கும் என்று அணித் தேர்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்நோக்கில் லாரா, தொடக்க ஆட்டக்காரர் ஸ்மித், வேகப் பந்து வீச்சாளர்கள் ரியான் கிங்ஃ பிடெல், எட்வர்ட்ஸ் ஆகியோர் அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்துடன் டெஸ்ட் அணியில் இயன் பிராட்ஷோ முதல் முதலாக சேர்க்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முதல் டெஸ்ட் கென்சிங்டன் ஓவலில் தொடங்கவுள்ளது. இரண்டாவது கடைசி டெஸ்ட் ஜமைக்காவின் சபீனா பார்க்கில் ஜுன் 3 இல் தொடங்கும்.

மேற்கிற்தியத்தீவுகள் அணி விபரம் வருமாறு :

சிவ்நாராயண் சந்தர்போல் (கப்டன்) கிரிஸ் கைல், தேவான் ஸ்மித், வேவல் ஹின்ட்ஸ், ராம்நரேஷ் சர்வான், பிரையன் லாரா, டி.பிராவோ, கார்ட்னி பிரவுனி, கோரி கொலிமூர், டேரன் பவல், ரியான் கிங், இயன் பிராட்ஷா, ஃபிடல் எட்பார்ட்ஸ்.

## ஜொலிஸ்ரார் கிண்ணக் கிரிக்கெட்

# கொக்குவில் - கிறாஸ்கொப்பர்ஸ் அணிகள்

## இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட 11 கழகங்களுக்கிடையிலான 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் - ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் - தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரல் விளையாட்டுக்கழகம் 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லதன் 31 ஓட்டங்களையும், ஈழமாறன் 26 ஓட்டங்களையும், பாலகுமார் 26 ஓட்டங்களையும், டியூறன் 10 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ் கொப்பர்ஸ் அணியின் சார்பில் பிரபலாதன் 6 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட், மயூரன் 6 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட், ராஜகாந்தன், தனஞ்சயன், சிறீதன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் 23.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களைப்பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் பிரபலாதன் ஆட்டம் இழக்காமல் 26 ஓட்டங்கள், மயூரன் 25 ஓட்டங்கள், தனஞ்சயன் 19 ஓட்டங்கள், ஜீவ சங்கர் 15 ஓட்டங்கள், ரி.மயூரன் 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யசோதரன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும், சுரேஸ்ராஜ் 18 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் பெற்றுக்கொடுத்தனர்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு போட்டியில் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி இரண்டாம் சுற்று ஆட்டத்திற்குத் தகுதிபெற்றது.

இப் போட்டயில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நயினஸ் 53 ஓட்டங்களையும், விநோதன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் அணி உமாநாத் 6 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட், ஜெயறூபன் 3 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட், பிரதீபன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சனசமூக விளையாட்டுக்கழகம் 27.5 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்களைப் பெற்று இப் போட்டியில் வெற்றி பெற்றது.

இதில் சசிதரன் 40 ஓட்டங்களையும், உமாநாத் 26 ஓட்டங்களையும், ருசியந்தன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பில் :

சுஜீவன் 5 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், தேவராஜ் 6 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும், ஜக்சன் 5 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும், சுரேன் 4 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

(58)

## மேஜர் மாறன் நினைவு

# கரப்பந்தாட்டப் போட்டியின்

# இறுதிப் போட்டி 30 ஆம் திகதி!

தமிழீழ விளையாட்டுத் துறையால் நடத்தப்பட்டுவந்த மேஜர் மாறன் நினைவான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் லீக் முறையில் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் மல்லாவி வண்ணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டி நாளன்று காலை ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியும், மாலை 4 மணிக்கு யாழ்.மாவட்டத்தின் முன்னணி விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்குமான நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி - மல்லாவி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார், யாழ்ப்பாண சிறந்த பாடசாலை அணிகள் கலந்துகொள்வதுடன் மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் - தங்கள் பெயர்களை 29 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் அல்லது துணுக்காய் பாண்டியன் குளம் பிரதேச விளையாட்டு அலுவலர்கள் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும், வெற்றிபெறும் வீரர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தமிழீழ விளையாட்டுத்துறையினர் அறிவித்தனர்.

# விளையாட்டு

# டெண்டுல்கருக்கு சத்திரசிகிச்சை

# 4 மாதங்கள் விளையாடமாட்டார்



(புதுடெல்கி)

டெனிஸ் எல்போ நோயால் பாதிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு நேற்றுமுன்தினம் லண்டனில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனால் அவருக்கு நான்கு மாதங்கள் ஓய்வெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

முழங்கைக் காயத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக சச்சின் இங்கிலாந்து சென்றார். லண்டனில் உள்ள ஒரு வைத்தியசாலையில் 2 நாட்களுக்கு முன்பு பரிசோதனை செய்யப்பட்டது. அவருக்கு முழங்கையில் சத்திர சிகிச்சை செய்தால்தான் விளையாடமுடியும் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அவருக்கு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தது. இந்திய கிரிக்கெட் அணியின் உடற்பயிற்சி வைத்தியர் ஜான் குளோஸ்டர் டெண்டுல்கருடன் லண்டனில் இருக்கிறார்.

சத்திரசிகிச்சை நடந்திருப்பதால் டெண்டுல்கர் நான்கு மாதம்வரை விளையாடாமல் ஓய்வு எடுக்கவேண்டியிருக்கும் என்று தெரியவந்துள்ளது.

அவருக்கு சத்திரசிகிச்சை நடந்த விபரத்தை இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே. நாயர் நேற்று சென்னையில் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது -

டெண்டுல்கரை பரிசோதித்த லண்டன் வைத்தியரும் உடற்பயிற்சி வைத்தியர் ஜான் குளோஸ்டரும் - டெண்டுல்கருக்கு கட்டாயம் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

எனவே நேற்றுமுன்தினம் லண்டன் வைத்தியசாலையில் அவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அவர் குறைந்தபட்சம் 15 வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தார்.

## பிரெஞ் ஓபன் ரெனிஸ்

# முதல் சுற்று ஆட்டங்களிலேயே அகாஷி - சானியா தோல்வி!



(பரிஸ்)

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்றில் ஆந்ரே அகாஷி மற்றும் இந்திய வீராங்கனை சானியா மிர்சா அதிர்ச்சித் தோல்வியடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்திய வீராங்கனை சானியா மிர்சா முதல் சுற்று ஆட்டத்தில் ஆர்ஜென்ரீன வீராங்கனை சிசலோ துல்கோவுடன் மோதினார். சானியா மிர்சா - உலக தர வரிசையில் 70 ஆவது இடமும், துல்கோ - 30 ஆவது இடமும் வகிப்பவர்கள் ஆவர்.

ஆரம்பத்திலிருந்தே துல்கோவின் கைதான் ஓங்கியிருந்தது. அவர் 6:3, 6:3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார். சானியா மிர்சாவால் ஒரு மணிநேரம் 17 நிமிடங்கள் மட்டுமே தாக்குப் பிடிக்க முடிந்தது.

முதல் சுற்றிலேயே தோல்வியடைந்துவிட்ட சானியா மிர்சா, பிரெஞ்சு ஓபன் ரெனிஸிலிருந்து முழுமையாக வெளியேறினார்.

நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவு முதலாம் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், 6:3, 6:2 என்ற நேர் செட் கணக்கில் ஸ்பெயின் வீராங்கனை மார்ட்டா மரிரோவைத் தோக்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் ஜஸ்டின் ஹெனின் 6:0, 4:6, 6:4 செட் கணக்கில் கொன்சிதா மார்ட்டினசை வென்றார்.


இன்னொரு ஆட்டத்தில் ஸ்வெட்லானா 6:1, 6:1 செட் கணக்கில் மதில்டேவைத் தோற்கடித்தார்.

மராட் சபின் 6:1, 4:6, 6:4, 6:2 செட் கணக்கில் ராமோன் ஸ்லுட்டரை வீழ்த்தினார்.

ஜுவான் கார்லஸ் பெரிரோ 6:4, 6:3, 6:3 செட் கணக்கில் வென்றார்.

இன்னொரு ஆட்டத்தில் ஷரபோவா கடும் போராட்டத்தின் பின் சகநாட்டு வீராங்கனையைத் தோற்கடித்தார்.

இதேவேளை, பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியில் முதல் சுற்றில் பிரபல வீரர் அகாஷி



தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்றுமுன்தினம் பிரபல அமெரிக்க வீரர் ஆந்ரே அகாஷி தோல்வியடைந்தார். பின்லாந்து நாட்டு வீரர் யார்க்கோ நிமினன் 7:5, 4:6, 6:7, 6:1, 6:0 என்ற செட் கணக்கில் அகாஷியை வீழ்த்தி அவருக்கு அதிர்ச்சித் தோல்வியைக் கொடுத்தார்.

அகாஷி இதுவரை 59 போட்டிகளில் வென்று சம்பியன் பட்டங்களை அள்ளிக் குவித்திருக்கிறார். ஆனால் சில தோல்விகளை அவர் சந்தித்திருந்த போதிலும் இதுபோன்று முதல் சுற்றிலேயே படுதோல்வியடைந்தது இல்லை.

# துறைசார் நிபுணர்களைக் கௌரவிக்கும் பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு உண்டு

## தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன்

எமது பிரதேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு துறைசார்ந்த நிபுணர்களையும், படைப்பாளிகளையும் பாராட்டி கௌரவிக்க வேண்டிய கடமை, பொறுப்பு விடுதலைப் புலிகளாகிய எமது அமைப்புக்கு உண்டு.

நாடு விடுதலை பெற்று ஒரு சமாதான சகவாழ்வு நிலை ஏற்படும் காலகட்டத்தில் நிச்சயமாக எமது அமைப்பு இவ்வாறான கௌரவிப்பு விழாக்களை நடத்தும் என கலாபூஷண விருது பெற்ற திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களுக்கு தென்மராட்சி மக்கள் சார்பில் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் தெரிவித்தார்.

இன்று ஒரு மாறுபட்ட அரசியல் சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். போருமற்ற - சமாதானமுமற்ற இக்கட்டான சூழலில் வாழ்கின்றோம்.

போரா, சமாதானமா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய நிலையில் உள்ளோம். இந்த நிலை மாறி ஒரு சுமுகமான நிலை ஏற்படும்போது, எமது அமைப்பே இவ்வாறான விழாக்களை எடுத்து துறைசார் நிபுணர்களைக் கௌரவிக்கும்.

கலாபூஷணம் விருது பெற்ற சிவாச்சாரியார் மேலும் பல்லாண்டு வாழ்ந்து நாமும், நாடும் நலமுடன் வாழ வழிகாட்ட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தேர் திருவிழாவுக்கு சென்றவரின் லான்ட் மாஸ்ரர் அபகரிப்பு!

(அளவெட்டி)

அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோவில் தேர்திருவிழாவின்போது, ஆலயத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லான்ட் மாஸ்ரர் திருடப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

ஆலய தேர் திருவிழாவுக்கு குடும்பத்துடன் சென்றவேளை ஆலயத்துக்கு சமீபமாக வீதித் தடைகள் போடப்பட்டு போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

இதனால் தொடர்ந்து செல்ல முடியாத நிலையில், உரிமையாளர் லான்ட் மாஸ்ரரை அருகில் காணியொன்றில் நிறுத்திவிட்டு, ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டை முடித்துவிட்டு திரும்பி வந்த போது லான்ட் மாஸ்ரரை காணவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தெல்லிப்பளை கோட்ட அரசியற்துறையினரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி ஆலயத்தில் உற்சவ காலங்களில் பெருமளவானோரின் நகைகள் அறுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (94)

# தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவியளிக்க கொரிய அரசு முன்வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கொரிய அரசாங்கம் உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தின்போது யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவிகள் வழங்குமாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் யோகராஜன், கொரியநாட்டு இலங்கைக்கான தூதுவரிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிகளை வழங்க கொரிய அரசு முன்வந்துள்ளது.

இதற்கமைய யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கல்வி கற்றுக்கொண்டு இருந்தபோது சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் விநியோகிக்கும் படிவத்தைப் பெற்று தமது விபரங்களைப் பதிந்து கிராம அலுவலர், பிரதேச செயலர்கள் மூலமாக உறுதிப்படுத்தி மீண்டும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# புற்றுநோய் மருத்துவமனை மீண்டும் தெல்லிப்பளையில்!

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை புற்றுநோய் மருத்துவமனை நாளை மீண்டும் திறக்கப்படவுள்ளது. உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள இந்த மருத்துவமனை செயற்படாமல் இருந்துவந்த நிலையில் இந்த நோயாளிகள் பெரும் கஷ்டங்களைச் சந்தித்து வந்தனர்.

அத்துடன் இந்த நோயாளிகள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கொழும்புக்கு சென்றே சிகிச்சை மேற்கொண்டு வந்தனர். இந்த மருத்துவமனை மீண்டும் திறக்கப்பட்டாலும் கதிரியக்கப் பிரிவு செயற்படுவதற்கு இராணுவத்தால் அனுமதி வழங்கப்படுமா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 350 பேருக்கு நட்டஈடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 1500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களில் கடந்த கால யுத்தத்தால் சொத்து பாதிப்பு மற்றும் உயிரிழப்பு, காயமடைந்தவர்களில் 350 பேருக்கு நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதில் யாழ்.மாவட்டத்தில் சொத்து பாதிப்புக்குள்ளான 208 பேருக்கு சொத்து இழப்புக்கான நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 7.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறே யாழ். மாவட்டத்தில் இறப்பு மற்றும் காயங்களுக்குள்ளான 142 பேருக்கு இதற்கான நட்டஈடும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 7.7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இந்த நட்டஈடு வழங்கும் திட்டத்தின் கீழ் சொத்துடமை இழப்புக்கான நட்டஈடு குறிப்பிட்ட தொகையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சொத்து இழப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துள்ளது. நிதி கிடைத்ததும் பாதிக்கப்பட்ட ஏனையோருக்கு நட்டஈடு வழங்கப்படும்.

காயம் மற்றும் இழப்புக்களுக்குள்ளான ஏனையோருக்கான நட்டஈடு என்பவற்றை தொடர்ந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

வரணி வடக்கு - சைவப்பிரகாச வித்தியாசாலையில் முன்பள்ளிக்கான ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லாமை பெரும் குறையாக இருந்துவந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு இக் கிராமத்தைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் கணினி மென்பொருள் வடிவமைப்பாளர் பொன்னம்பலம் இரவீந்திரனால் அனுப்பப்பட்ட நன்கொடையால் புதிதாக காணி யொன்று கொள்வனவு செய்யப்பட்டு முன்பள்ளி கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இது எதிர்காலத்தில் இளம் சிறார்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக அமையுமென அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## யாழ்.பல்கலையில் ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஆதரவுடன் தமிழகத்தின் புகழ்பூத்த ஓவியர் புகழேந்தியின் தமிழர்களின் வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியங்கள் அடங்கிய ஓவியக் கண்காட்சி அடுத்த மாதம் முதல் வாரத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

## மகா கும்பாபிஷேகம்

சாவற்கட்டு - சந்திக்குளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வு - ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அன்று காலை 6 மணிக்கு கர்மாரம்ப பூசை வழிபாடுகளும், 9 ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் எண்ணெய்க்காப்பு சாத்தலும், 10 ஆம் திகதி காலை 7.30 மணிமுதல் 8.20 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேக நிகழ்வும் வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளன. (44)

## வருடாந்த உற்சவம்

(சுதுமலை)

யாழ்ப்பாணம் - வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (91)

# நடைபாதையோர வியாபாரிகளால் போக்குவரத்து நெருக்கடிகள்!

யாழ்.போதனா வைத்திய சாலை முன்பாக உள்ள நடைபாதைகளில் சிறு வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் பயணிகளும், வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.நகரப் பகுதி ஊடாக நடந்துசெல்லும் பொதுமக்கள், நோயாளிகளின் உறவினர்கள், அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் இந்தப் பாதையையே பயன்படுத்துகின்றனர்.

இந்த நடைபாதையில் சிறு வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால், பாதசாரிகள் வீதிகளில் இறங்கி தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அப்பகுதி ஊடாக பிரயாணத்தை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுவதுடன் சில வேளைகளில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுகின்றன என மக்களும், வாகன சாரதிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.

## கலை நிலா அரங்கு

திருமறைக் கலாமன்றத்தின் மாதாந்த அரங்க நிகழ்வான கலை நிலா அரங்கு நாளை மாலை 7 மணிக்கு மன்ற திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

கவின்கலை பயிலக மாணவர்களால் நடத்தப்படவுள்ள கலை நிலா அரங்கில் நடன நிகழ்வுகளுடன், இசைக் கதம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (91)



## வடமராட்சியில் 'துணிவே துணை' வீதி நாடகம்

(சுதுமலை)

யாழ். சமூக மேம்பாட்டு மையம் - திருமறைக் கலாமன்ற கலைஞர்களைக் கொண்டு ஜோ. ஜோன்சன் ராஜ்குமாரின் நெறியாள்கையில் உருவான 'துணிவே துணை' வீதி நாடகத்தை வடமராட்சி பகுதிகளில் நடத்திவருகின்றது.

கடற்தொழிலாளர்களின் அவலங்களைச் சித்தரிப்பதுடன், தொடர்ச்சியாக அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களிலிருந்து எவ்வாறு மீளுவது, எவ்வாறு சுயமாக இயங்கலாம் என்ற கருத்தை வலியுறுத்தி இந்த வீதி நாடகம் இடம்பெற்றுவருகின்றது.

வடமராட்சி பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களில் இந்த வீதி நாடகம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடகப் போட்டியில் ஒரு காட்சியையும், வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவனொருவருக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் சான்றிதழ் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.




# தாவரவியல் கிருமிநாசினிகளில் முக்கியமானது வேம்பு

உலகில் ஏனைய உயிரினங்களை விட, அதிகமாக வாழ்பவை நுண்ணங்கிகள் ஆகும். இவற்றில் சிலவகையான நுண்ணங்கிகள், மனிதனுக்கு உதவுகின்றன. ஆனால், மனிதனுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் 3 ஆயிரம் வகையான நுண்ணங்கிகள் உலகில் வாழ்கின்றன. இவை மனிதர்களுக்கும், மனிதன் உபயோகிக்கும் பொருட்கள், உணவுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இதேநேரம், அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்படல் வேண்டும். அதாவது, ஒரு ஏக்கரில் கிடைக்கின்ற விளைச்சலை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இதற்காக, விவசாயிகள் பலவிதமான விவசாய முறைகளை மேற்கொள்கின்றனர். அவையாவன, அதிக விளைச்சலைத் தரும் விதைகளின் பாவனை, புதிய பயிர் செய்யும் முறைகள், அதிகரிக்கும் இரசாயன உரப்பாவனை.

இந்த முறைகளால், அதிக விளைச்சல் கிடைத்தாலும், அளவுக்கதிகமான இரசாயன உரங்கள், கிருமிநாசினிப் பாவனையால் சுற்றாடலின் சமநிலையில் பாதிப்பு எற்படுகிறது. இரசாயன, கிருமிநாசினிப் பாவனையால் நன்மைகள் இருந்தாலும், தீமைகளும் இருக்கின்றன.

பயிருக்கு நன்மை பயக்கும் நுண்ணங்கிகள் இவற்றின் பாவனையால் அழிவுறுதல், நுண்ணங்கிகளின் இயற்கையான எதிரிகள் அழிவுறுதல், மண் பாதிப்படைதல் போன்ற தீமைகள ஏற்படலாம்.

மேலும், மரக்கறி போன்ற பயிர்களுக்கு தொடர்ச்சியாக இரசாயன உரம், கிருமிநாசினி போன்றவற்றை வழங்க வேண்டியிருக்கும். அத்துடன் விளைச்சலைப் பெறும் காலத்திலும் இவற்றின் பாதிப்பு இருக்கும். இதனை உட்கொள்ளும்பொழுது, அதனால் பலவித நோய்களுக்கு மனிதர்கள் ஆளாகவேண்டி ஏற்படுகிறது.

இதனால், சுற்றாடலை மாசுபடுத்தும் இரசாயன உரம், கிருமிநாசினிக்குப் பதிலாக சுற்றாடலுக்கு ஏற்ற தாவரவியல் கிருமிநாசினிகளைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம், பயிர்களின் உற்பத்திச்செலவைக் குறைத்துக் கொள்வதுடன், நச்சுத்தன்மையற்ற விளைச்சலை அதாவது, மரக்கறி, பழவகைகளைச் சந்தைக்கு அனுப்ப முடியும். மேலும் இது இரசாயன கிருமிநாசினிகளை விடவும் அதிகளவு ஆதாயத்தைத் தரக்கூடியது. அத்துடன் சுற்றாடலையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இரசாயன கிருமிநாசினிகளின் பயன்பாட்டின் கால அளவைவிட, தாவரவியல் கிருமிநாசினிகளின் பயனானது - அதிக காலங்களுக்குப் பயிர்களுக்கு இருக்கும். இரசாயன கிருமிநாசினிகளைவிட, தாவரவியல் கிருமிநாசினி பாதுகாப்பானது.

கிராமங்களில் இவ்வாறான தாவரவியல் கிருமிநாசினிகளை விவசாயிகள் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு, பயிர்களுக்கு உபயோகிக்கக்கூடிய தாவரவியல் கிருமிநாசினிகளில் முக்கியமானது வேம்பு ஆகும். இதனை வைத்தியர்கள் மருந்துக்கும் பயன்படுத்துகின்றனர்.

வேப்பமரம் சாதாரணமாக, 25 மீற்றர் உயரத்துக்கு வளரக்கூடியது. இதன் அனைத்துப் பகுதிகளும், கிருமிகளை அழிக்கக்கூடிய தன்மை கொண்டது. ஆனால், வேப்பம் விதைகளிலேயே கிருமிநாசினித் தன்மை அதிகமாக இருக்கிறது. வேப்பம் பூ, வேப்பம் இலை, வேப்பம் விதைகள் போன்றவற்றிலுள்ள பயன்களைப் பார்ப்போம்.

## வேப்பமரத்திலுள்ள நன்மைகள்

1. வேப்பம் பூ - வேப்பம் பூவைப் பயன்படுத்தி, வடகம், இனிப்பு, பான வகைகள் தயாரிக்கப்பயன்படுகிறது. சூப் வகைகளைத் தயாரிக்கவும் வேப்பம் பூவைப் பயன்படுத்துகின்றனர்.

2. வேப்பம் பட்டை - இது சாம்பல் நிறம் கொண்டதாகவும், கடினமானதாகவும் காணப்படுகிறது. இதில் Tatin என்ற இரசாயன திரவியம் 14 வீதம் அடங்கியுள்ளது. மலேரியா காய்ச்சல், தோலில் ஏற்படும் வைரஸ் நோய்களுக்கு மிகச்சிறந்த மருந்தாக, வேப்பம்



பட்டைக் கசாயம் விளங்குகின்றது.

3. வேப்பம் இலை - வேப்பம் இலை கிருமிநாசினியாகவும், மருந்தாகவும் பயன்படுகிறது. எமது முன்னோர்கள் நெற்செய்கையின்போது, பயிர்களைப் பாதிக்கும் பீடைகள், நுண்ணங்கிகளை அழிக்க இரசாயன கிருமிநாசினிகளைப் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக, வேப்பம் இலையைப் பயிரின அனைத்து இடங்களிலும் பரப்பி விட்டார்கள். இதில் பயிர்களைப் பாதிக்கும் வட்டப் புழுக்களைத் தடுக்கும் குணம் உள்ளது.

பதியங்களில் கன்றுகளைப் பிடுங்கி எடுப்பதற்கு 20 நாட்களுக்கு முன்னர் வேப்பம் இலைச்சாறு மண்ணுக்கு சேர்ப்பதன்மூலமும், வட்டப் புழுக்களைத் தடுத்துக்கொள்ளலாம். 15 லீற்றர் தயிருக்கு 15 லீற்றர் நீரும், வேப்பம் இலைகளும் கலந்து 15 நாட்களுக்கு வைத்து, பின்பு வடித்து பயிர்களுக்குத் தெளிப்பதால், காய்களை ஓட்டையாக்கும் பீடைகளைத் தடுத்துக்கொள்ளலாம்.

### வேப்பம் இலையில் அடங்கியுள்ள இரசாயன குணங்கள்

| | |
|---|---|
| புரதம் | – 15.00 |
| நைதரசன் | – 59.1 |
| வேதனைகளைத் தடுக்கும் சாறு | – 3.80 |
| தும்பு | – 11.24 |
| சிவிகி | – 1.37 |
| பொஸ்பரஸ் | – 0.16 |
| கல்சியம் | – 2.96 |
| லிக்னின் | – 5.40 |
| செம்பு | – 13.80 |
| கொபோல்ட் | – 0.10 |
| மங்கனீஸ் | – 26.30 |
| சின்க் | – 25.00 |
| ரெலிபசினன் | – 0.23 |

4. வேப்பம் பழம் - வேப்பம் பழம் என்பது, பழுத்த வேப்பம் விதைகள் ஆகும். காய்கள் பழுத்த பின் தோல் மஞ்சள் நிறமாக மாறும். வேப்பம் பழத்தின் சதைகள்ளை நீருடன் கலந்து செடிகளுக்குத் தெளிப்பதால், செடிகளைத் தின்னும் வெட்டுக்கிளி போன்ற பீடைகளைத் தடுத்துக்கொள்ளலாம்.

இந்த சதைப்பகுதிகளை பறவைகள், மிருகங்கள் உணவாக உட்கொள்கின்றன. இது பானம் தயாரிப்பதற்கும், மருந்தாகவும் உபயோகிக்கின்றனர். இதனை சவர்க்காரம், பற்பொடி செய்வதற்கும் உபயோகப்படுத்த முடியும்.

5. வேப்பம் விதைகள் - வேப்பம் விதைகளில் 200 இற்கும் அதிகமான இரசாயன வகைகள் அடங்கியுள்ளன. உயிரியல், விஞ்ஞான ரீதியாக வெவ்வேறு விதமாக கிருமிநாசினியாகத் தொழிற்படும் சக்தி இதற்கு உண்டு. இந்தத் தகவலின்படி, பல பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகள், நுண்ணங்கிகளைத் தடுத்துக் கொள்வதற்காக வேப்பம்விதை நாசினியைத் தயாரித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வேப்பம் கிருமி நாசினியை எவ்வாறு தயாரித்துக்கொள்வது?

முதலில் சுத்தமான 40 கிராம் வேப்பம் விதைகளை நன்றாக இடித்து, தூளாக்கிக்கொள்ள வேண்டும். பின்னர் ஒரு லீற்றர் நீருடன் கலக்கவேண்டும். கலக்கப்பட்ட கலவையை 12 - 24 மணித்தியா லங்களுக்கு இருட்டான இடத்தில் வைக்கவேண்டும்.

தூளாக்கிய விதைகளை நீருடன் கலந்து 12 மணித்தியாலங்கள் வைப்பதனால், விதைகளிலுள்ள இரசாயனங்கள் நீருடன் சேர்ந்துவிடும்.

மறுநாள் இந்தக் கலவையைப் பல தடவைகள் கைகளால் பிழிந்து வடித்துக்கொள்ளவேண்டும்.

இந்தக் கலவை யுடன் சவர்க்கார நீர் கலந்து மாலையில் சூரிய ஒளிபடாத நேரத்தில் பயிர்களுக்குத் தெளிக்க வேண்டும்.

7 - 10 நாட்களுக்கு ஒருதடவை இந்தக் கல வையை வழங்குவதன்மூலம் சிறப்பான பலாபலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். சூரிய ஒளியால் கிருமி நாசினியில் உள்ள இரசாயனங்கள் அழிவதைக் குறைத்துக் கொள்வதற்காகவே மாலை நேரங்களில் இந்தக் கிருமிநாசினியைத் தெளிக்கவேண் டும்.

மேலும் இரவு நேரத்தில் மரத்தின் இலைகள் விரிவடைந்து, வேப்பம் விதைக் கலவையை நன்றாக உறிஞ்சிக் கொள்ளும்.

பயிர்களுக்கு இந்தக் கலவையைத் தெளிக்கும்போது, குறிப்பிட்ட அளவை விட அதிகமாகாமல் பார்த்துக்கொள்வது அவசியம். உரிய கால எல்லைகளில் வேப்பம் நீர் கிருமிநாசினியைத் தெளிப்பதன் மூலம் நோய்ப் பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

வேப்பம்விதை நீர்க் கிருமிநாசினிக்குப் பயன்படுத்தும் வேப்பம் விதைகள், ஒரு வருடத்தக்குள் சேகரிக்கப்பட்ட புதிய விதைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

இந்தக் கலவை 198 கிருமி நாசினி வகைகளுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தக் கூடியது. அத்தோடு இந்தக் கலவை புதிய இரசாயனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவற்றுக்கும் மேலான பலன்களைத் தருவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நீர்க் கலவையைவிடவும் இன்னுமொரு வகையான வேப்பம் விதைக் கலவை உண்டு. இதனைத் தயாரிக்கும்முறை வருமாறு -

5 கிலோ கிராம் வேப்பம் விதைகளைத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் இந்தத் தூளைச் சிறிய சாக்கு ஒன்றினுள் போட்டு, 100 லீற்றர் நீரில் 8 மணித்தியாளங்களுக்கு ஊறவிடவேண்டும். இவ்வாறு சாக்கினுள் போடுவதால் இலகுவாக வடித்துக் கொள்ள முடியும்.

வடித்துக் கொண்ட வேப்பம் சாற்றுடன் 300 மில்லி லீற்றர் சவர்க்கார நீரைக் கலந்து கொள்ள வேண்டும். இந்தக் கலவையில் 500 லீற்றர் ஒரு ஹெக்டயருக்கு விசிறப் போதுமானதாகும். இந்த வேப்பம் விதைகளால் வெங்காயப் பயிரைப் பாதிக்கும் மைட்டா, மிளகாய்ப் பயிரைப் பாதிக்கும் அட்டைகள், செடி உன்னிகள், வெள்ளை ஈ போன்ற பீடைகளைத் தடுத்துக் கொள்ள முடியும்.

இதை விடவும் வண்டு வகைகள், பழ ஈ, நுளம்பு, வைக்கோல் மூட்டை ஆகியவற்றின் மூலம் பரவும் நோய்களைத் தடுத்துக் கொள்ளமுடியும்.

பீடைகளின் வளர்ச்சி அடைந்த முட்டைகளைக் கூட அழிக்கும் தன்மை இதற்குள்ளது. களஞ்சியங்களில் விசிறுவதன் மூலம் நோய்ப் பரவலைத் தடுக்க முடியும். (தொடரும்...)

சசி சந்திரகாசன்

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 50/= | 60/= | 50/= | 45/= | 30/= |
| வெண்டிக்காய் | 20/= | 40/= | 50/= | 30/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 85/= | 70/= | 80/= | 90/= | 85/= | 100/= |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 40/= | 30/= | 40/= | 35/= |
| பாகற்காய் | 80/= | 60/= | 70/= | 70/= | 80/= | 60/= |
| கரட் | 40/= | 50/= | 60/= | 50/= | 50/= | 80/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 300/= | 200/= | 300/= | 300/= | - | 400/= |
| வெங்காயம் | 60/= | 50/= | 60/= | 50/= | 60/= | 60/= |
| பச்சை மிளகாய் | 40/= | 30/= | 40/= | 30/= | 40/= | 60/= |

## தொழில்மலர்


# ஒரு நிறுவனத்தின் மனித உறவுகளை கருத்திற்கொள்ளத் தவறின் –அது நிறுவனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்

மனிதன் சமூக அமைப்பின் ஒரு அங்கம். நாள்தோறும் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களைச் சார்ந்து வாழவேண்டியுள்ளது. எனவே, மனிதர்களிடையே உறவுகள் மலர்கின்றன. அவை சூழலுக்கேற்பவும், மனநிலைக்கேற்பவும் அமைகின்றன. இத்தகைய மனித உறவுகளில் வெற்றிகரமாகச் செயற்படுபவர், தாங்கள் எண்ணியதை அடைவார்கள்.

ஒவ்வொரு மனிதரும் அன்றாடம் பல்வேறு பாத்திரங்களை ஏற்றுச் செயற்படவேண்டியுள்ளது. ஒரு மனிதர் -மகனாக, உடன்பிறந்தவராக, கணவராக, தந்தையாக, நண்பராக, தொழில் புரிபவராக, ஆலோசகராக, தலைவராக இவ்வாறு எத்தனையோ பாத்திரங்களை ஏற்றுச் செயற்படும்போது, சிலசமயங்களில் ஒன்றுக்கொன்று மோதவேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பாத்திர மோதல்களால் மனித உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இத்தகைய விரிசல் ஏற்படாமல் உறவுகளைக் கையாள்பவர் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார். எனவே, மனித உறவுகள் எத்தகையவை, மனித மனநிலை எத்தகைய சூழ்நிலைகளில் எப்படி அமைகிறது என்பதைப் புரிந்துகொண்டால், நாம் அதற்கேற்றவாறு செயற்படமுடியும்.

ஒவ்வொரு நிறுவனமும் ஒரு குடும்பத்தைப்போலவே பல மனிதர்களைக் கொண்டது. அவர்களிடையே உறவுகள் பல்வேறு நிலைகளில் ஏற்படுகின்றன. அதிகாரி, மேற்பார்வையாளர், தொழிலாளி என்ற நிலைகளில், மேலதிகாரி, உடன் பணியாற்றுவோர், தம்கீழ்ப் பணிசெய்பவர், என்ற உறவுகளும்-



பொருள் வழங்குபவர், வாடிக்கையாளர் என்ற நிலையில் வெளியுறவுகளும் அமைகின்றன.

எல்லா நிலைகளிலும் நல்லுறவு தேவைப்படுகிறது. அடுத்தவருடைய நலனில் நாம் அக்கறை எடுத்துக் கொண்டால், அவர்கள் நம்மிடம் விருப்புக் கொள் கின்றனர். நாம் நமது தேவையை எளிதாக நிறைவுசெய்துகொள்ள முடிகிறது.

மனிதர்களிடையே எப்போதும் ஒத்த கருத்து இருந்துவிடும் என்று கூறிவிட முடியாது. கருத்து வேறுபாடுகள் எழத்தான் செய்யும். ஆனால் அடுத்தவர் கருத்தை மதிக்கவேண்டும். அது தவறு என்றாலும், அதை நேரிடையாகக் கூறாமல், தம் கருத்து அதிலிருந்து எப்படி மாறு படுகிறது, அதனால் என்ன நன்மை விளையும் என்பதைப் பொறுமையாக விளக்கினால், அடுத்தவர் அதை ஏற்றுக் கொள்ளக்கூடும். இதற்குப் பதிலாக வாதத்தில் ஈடுபட்டால், இருதரப்பிலும் அவரவர் நிலையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். வாதம், சிக்கலுக்கு ஒளியூட்ட வேண்டுமே தவிர, வெப்பம் ஊட்டக் கூடாது. சிக்கலுக்குத் தீர்வுகாண முயல வேண்டுமே தவிர, சிக்கலை மேலும் அதிக சிக்கலுடையதாக ஆக்கிவிடக் கூடாது.

ஒரு நிறுவனத்தின் மனித உறவுகளைக் கருத்தில் கொள்ளத் தவறினால், அவற்றில் ஏற்படும் சிக்கல்கள் நிறுவனத்தில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். சில அலுவலகங்களில் கோப்புகளிலேயே போர் நடைபெறுவதைக் காணலாம். கருத்து வேறுபாடுகளை ஒருவருக்கொருவர் எழுத்தில் எழுதி, ஆவணமாக்கி விடுவார்கள். இதற்குக் காரணம் - அடுத்தவரைவிடத் தான் அறிவாளி என்ற உணர்வுதான். எந்த மனிதர் அகந்தையின்றி, ஆணவமின்றி இருக்கிறாரோ அவர் எல்லோராலும் போற்றப்படுவார். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உடையவருக்கு அதிகமான நண்பர்கள் இருப்பார்கள்.


பெரும்பாலும் இரு மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாட்டுக்குக் காரணம் - மூன்றாவது மனிதராகவே இருப்பார். அவர்களிடையே எந்த முரண்பாடும் இருக்காது. எனினும், மூன்றாவது மனிதர் பற்றிய நிகழ்வுகளால் இருவரும் கருத்துவேறுபாடு கொள்கின்றனர். இருவரும் மனம் விட்டு நேரில் கதைத்தால், இத்தகைய கருத்துவேறுபாடு மேலும் வளராமல், ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு செயற்பட ஏதுவாகும்.

உளவியல் அறிஞர்கள் ஒவ்வொரு மனிதனின் ஆளுமையிலும் மூன்று நிலைகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அவை பெற்றோர் நிலை, முதிர்வு நிலை, குழவி நிலை என்பனவாகும்.

இந்த மூன்று நிலைகளில் ஏதாவது ஒரு நிலையில் இருந்து அடுத்தவருடன் உறவு கொள்கிறார்கள். அடுத்தவருக்கு அறிவுரை கூறும்போதும், கண்டிக்கும் போதும், ஒருவர் பெற்றோர் நிலையிலிருந்து செயற்படுகிறார். இயல்பு நிலையில் அடுத்தவருடன் கதைக்கும்போதும், தமக்குத் தோன்றியதை அலுவலக நிலையில் கூறும்போதும், ஒருவர் முதிர்வு நிலையில் செயற்படுகிறார்.

பகிடியும், கேலியுமாக அடுத்தவருடன் கதைக்கும்போது, ஒருவர் குழவி நிலையில் செயற்படுகிறார். இதே போன்று அடுத்தவரும் இந்த மூன்று நிலைகளில் ஏதாவது ஒன்றில் செயற்படுகிறார்.

இருவரும் ஒரே நிலையிலிருந்து செயற்படும்போது, கருத்து வேறுபாடு எழாது. ஆனால், வெவ்வேறு நிலைகளிலிருந்து இருவரும் உரையாடும்போது மாறுபாடு ஏற்படுகிறது. இதைப் பின்வரும் படம் விளக்கும்;




பெ - பெற்றோர் நிலை
மு - முதிர்வு நிலை
கு - குழவி நிலை

மேற்கண்டவாறு உரையாடல்களும், செயற்பாடுகளும் ஒன்பது வகையாக நடைபெறலாம். இவற்றுள் மூன்று நிலைகள் ஒத்த நிலைகள். ஏனைய ஆறும் மாறுபட்ட நிலைகள். இந்தகைய மாறுபட்ட நிலைகளுக்கு இருவரின் பின்புலமும், முந்தைய நிகழ்வுகளும் காரணமாக அமைகின்றன.

காலையிலிருந்து இரவுவரை இத்தகைய நிகழ்வுகள் ஒருவருக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. சிறுசிறு நிகழ்வுகள்கூட மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தொடர்ந்துவரும் நிகழ்வுகளில் அது வெளிப்படுகிறது. வீட்டில் சண்டை என்றால் அலுவலகத்திலும், அலுவலகத்தில் கசப்பான நிகழ்வுகள் என்றால் அது வீட்டிலும் எதிரொலிப்பதை நாம் கண்டிருக்கிறோம்.

எனவே, இத்தகைய பின்புலத்தைக் கருத்தில் கொண்டால், ஒருவருடைய உணர்வுகளை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஒருவர் கோபமாக இருக்கும்போது அவரிடம் கதைப்பதைத் தவிர்க்க லாம். அவர் மகிழ்வாக இருக்கும் நேரத்தில் நம் அலுவல்களை முடித்துக்கொள்ளலாம்.

ஒரு நிறுவனத்தில் விரும்பியோ, விரும்பாமலோ பல குழுக்கள் உருவாகும். இது தவிர்க்க இயலாதது. ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், ஒரே பொழுது போக்கு அம்சங்கள் கொண்டவர்கள் போன்ற ஈர்ப்புகளால் சிறு சிறு குழுக்களாக மனிதர்கள் இணைவார்கள்.

உணவு நேரம், தேனீர் அருந்தும் நேரம், விடுமுறை நாட்கள் ஆகியவற்றில் இந்தக் குழுக்கள் செயற்படும். இவை அலுவல் சாரா அமைப்புகள் ஆகும்.

(தொடரும்...)

# உங்கள் வியாபாரத்தை முன்னேற்ற ஒரு அரிய சந்தர்ப்பம்

BDC network

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**வியாபார அபிவிருத்திசேவை ஊக்குவிப்பாளருக்கானது...**

❖ தொழில்நுட்ப பரிவர்த்தனை.

❖ சிறிய, நடுத்தரக் கைத்தொழில் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளல்.

❖ கைத்தொழில் சார்பான முதலீட்டு ஊக்குவிப்புகள்.

❖ வியாபார அபிவிருத்திசேவைகள், வழங்குநர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளை வடிவமைத்தல், ஒருங்கமைத்தல் அல்லது நடத்துதல்.

❖ சிறிய, நடுத்தர கைத்தொழில் தொடர்பான திட்டமிடல், கொள்கை உருவாக்கல் ஆகிய செயற்பாடுகள்.

**சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கானது...**

❖ ஊழியர்களுக்கான பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றல், கல்விச் சுற்றுலாக்கள் ஆகிய செயற்பாடுகள்.

❖ பயிற்சிகளுக்கான தேவைகளைக் கண்டறிதலும், மனிதவள அபிவிருத்தி தொடர்பான திட்டங்களைத் தயாரித்தலும்.

❖ வியாபார அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களைத் தீட்டுதல்.

❖ உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தீட்டுதல்.

❖ இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்திலிருந்து தரச்சான்றிதழ் அறிக்கையைப் பெறுதலும் (SLS), உலகளாவிய நிறுவனங்களின் தரச்சான்றிதழைப் பெறுதல் (Eg: ISO).

❖ புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான ஆராய்ச்சிகளும், அபிவிருத்திகளும்.

(உற்பத்தி இயந்திரவியல், தரக்கட்டுப்பாடு, உற்பத்தி தொடர்பான ஆய்வு, சந்தைப்படுத்தல் தொடர்பான ஆய்வு மற்றும் பொதியிடுதல், பெயரிடுதல்)

❖ தொழில்நுட்பம் சம்பந்தமான அறிக்கைகளைத் தயாரித்தலும், சாத்தியக்கூற்று அறிக்கையைத் தயாரித்தல், திட்ட அறிக்கை முகாமைத்துவம், தொழில்நுட்ப வடிவமைப்புடன் கூடிய விளக்கப்படங்களைத் தயாரித்தல்.

❖ வியாபார ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கான கையேடுகளைத் தயாரித்தல்.

❖ தகவல் தொழில்நுட்பத்தை வியாபார அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்.

(கணினி மென்பொருட்களைக் கையாள்வதற்கான பயிற்சி மற்றும் வெப்தளங்களைத் தயாரித்தல்)

❖ தேவையான தொழில்நுட்பத்தைத் தெரிவுசெய்தலும், வழங்குதலும்.

❖ புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைவாய்ப்புகளை உருவாக்குதல்.

❖ சட்டரீதியான அறிக்கைகளைத் தயாரித்தல்.

(வியாபார ஒப்பந்தங்கள், இணக்கப்பாட்டு ஒப்பந்தங்கள், உத்தரவாதப் பத்திரங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்தல்)

❖ வியாபார அபிவிருத்தி நிலையை வலையமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய வியாபார அபிவிருத்திசேவை வழங்கல்கள்.

(முற்றும்...)

# மன்னார் நகரப் பகுதியில் காவலரண்கள்; கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு!

மன்னார் நகரப் பகுதியில் படையினர் புதிதாகக் காவலரண்களை அமைத்து வருவதாக, விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறையினர்- போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

மன்னார் நகரில் கச்சேரி, வங்கிக் கட்டடம், ஆஸ்பத்திரி வீதிச்சந்தி ஆகியஇடங்களில் கடந்த சில தினங்களாகப் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர். அத்துடன் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் காவலரண்களைப் புனரமைக்கும் பணிகளிலும் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கையால் மன்னார் மாவட்ட மக்களிடையே -மீண்டும் யுத்தம் வெடிக்குமா என்ற அச்சமும், பயப்பீதியும் ஏற்பட்டுள்ளது.

படையினரின் இந்த நடவடிக்கையை மன்னார் மாவட்ட அரசியல்துறையினர் கண்டித்துள்ளதுடன், இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் என மன்னார் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (201)

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் பெரும் ஆளணிப் பற்றாக்குறையாக உள்ளது!

## முல்லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக பெரும் நெருக்கடியுள்ளதாகவும், மக்களுக்கான சேவையை சீரானமுறையில் செய்ய முடியாத ஓர் துர்ப்பாக்கிய நிலையுள்ளதாவும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி. ஜெயகுலராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக அவரைக் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 15வைத்திய அதிகாரிகள் தேவையாகவுள்ள போதும், இருவர் மட்டுமே கடமையிலுள்ளனர். பதில் வைத்தியர்கள், உதவி வைத்தியர்கள் 13 பேர் தேவையாகவுள்ளபோது 10பேர் மட்டுமே கடமையிலுள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர்கள் 40பேர் தேவையாகவுள்ள போதும், 9 பேர் மட்டுமேயுள்ளனர். இதேபோல ஏனைய பதவி நிலைகளுக்கும் வெற்றிடங்கள் நிறையவுள்ளன. கடமையில் ஈடுபடும் வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மற்றும் மேலதிக சேவைகளால்தான் வைத்தியசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சுகயீனம் காரணமாக ஒரு வைத்தியர் விடுமுறையில் சென்றால், அந்த இடத்துக்கு பதிலுக்கு வைத்தியரை அனுப்ப முடியாத சூழ்நிலையிலுள்ளோம்.

இதைவிட நீண்ட காலமாகப் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் மாற்றலாகிச் செல்ல முடியாத நிலை இந்த மாவட்டத்தில் காணப்படுகிறது. மாற்றலாகிச் செல்லும் உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறு மாவட்டங்களிலிருந்து மாற்றலாகி வருவதற்கு எவரும் முன்வருவதில்லை.

இது குறித்து உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் பயன் ஏதும் இல்லை.

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அதிகமான வைத்தியர்கள், வெளி மாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர். அவர்கள் குறிப்பிட்ட காலமாவது இந்த மாவட்டத்தில் சேவையாற்றுவதற்கு முன்வரவேண்டும் என, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர்களுக்குத் தான் அழைப்பு விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்குகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பிரதேச கிராம ரீதியாக சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

தற்போதைய அரசியல் போக்கும், தமிழ் மக்களின் விழிப்புணர்வும் பங்களிப்பும் எனும் தலைப்பில் கிராம ரீதியாக இந்தக் கருத்தரங்குகள் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் தலைமையில் கடந்த புதன்கிழமை பகல் 11 மணிக்கு செம்பியன் பற்று தெற்கு முன்பள்ளியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துக்களை தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா, கிளிநொச்சி மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தக் கருத்தரங்கு நிகழ்வில் பொது மக்களின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பணியாளர்கள், கடற்றொழிலாளர் சமாச சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு உடுத்துறை கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமண்டபத்தில் சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (21)

# பாடசாலை மாணவருக்கு மருத்துவப் பரிசோதனை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ந.பாஸ்கரன் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதார மருத்துவமாது, மற்றும் கிராமிய தரிசிப்பாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஒன்றிணைந்து மருத்துவப் பரிசோதனை நடத்தியதோடு, அதற்கான சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவப் பரிசோதனை தரம் - 1,4,7 ஆகிய மூன்று வகுப்புகளைச் சேர்ந்த 113 மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனையில் கண், காது, பல் போன்றவற்றுக்கான பிரச்சினைகள் பரிசோதனை செய்யப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், மேலதிக சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய மாணவர்களுக்கு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிபார்சுக் கடிதமும் வழங்கப்பட்டது. (இ)

# முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறையினரால் அரசியல் கருத்தரங்கும், சிரமதானப்பணிகளும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறையின் சகல பிரிவுகளையும் சேர்ந்த போராளிகள் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து வருவதுடன், சமகால அரசியல் கருத்தரங்குகளையும், சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக அண்மையில் கரைச்சி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சின்னச் சாளம்பன் கிராம மக்களைச் சந்தித்த போராளிகள், அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைத் தாம் நிவர்த்தி செய்து தருவதாகத் தெரிவித்தோடு, அந்தக் கிராமத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு சமகால அரசியல் கருத்தரங்குகளையும் நடத்தினர்.

ஒட்டுசுட்டான் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் கருத்துரை களைத் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# பேர்ஸ் கண்டெடுப்பு

(விசுவமடு)

நாச்சிக்குடா - விசுவமடு என்னும் முகவரியை உடைய தவநாயகம் அனுலா என்பவரது தேசிய அடையாள அட்டையுடன் பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டத்தில் அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கிராமம் கிராமமாக நடைபெற்றுவருகின்றன. இந்தக்கருத்தரங்குகள் விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலத்தில் காணப்படும் அரசியல் நிலைமையையும், இன்றைய நிலைமைகளையும் மக்களுக்கு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் எடுத்துக்கூறி வருகின்றனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே - 26

1788 : இங்கிலாந்தில் சார்லிசில் மருத்துவமனையில் ஒரு குழந்தை பிறந்தது. ஐந்து நாட்கள் வரை சாதாரண குழந்தைகளைப் போலவே இருந்தது. ஐந்தாம் நாள் திடீரென்று இறந்து விட்டது. இறப்பின் காரணத்தைத் தெரிந்து கொள்ள பிரேத பரிசோதனைகளைச் செய்தபோது, குழந்தையின் தலையில் மூளையே இல்லை என்பது தெரியவந்தது.

1897 : மனோன்மணீயம் என்ற கவிதை நாடகம்தந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை காலமானார்.

1908 : முதன் முதலாக மத்திய கிழக்கில் வியாபார நோக்கோடு மசகு எண்ணெய் பெருமளவு எடுக்கப்பட்டது. ஈரானில், மல்ஜித் - இ- சுலைமான் என்ற இடத்தில் இந்த எண்ணெய்க் கிணறு அடையாளம் காணப்பட்டது.

1918 : அமெரிக்காவில் முதலாவது உலக மகா யுத்தம் காரணமாக, உணவு நிர்வாகத்துறை ஒரு ஆளுக்கு, ஒரு வாரத்துக்கு 912 கிராம் மாமிச உணவு மட்டுமே வழங்கப்படுமென அறிவித்தது.

1933 : அண்டார்டிகாவில் மூன்றிலொரு பகுதி தங்களுடையது என்று அவுஸ்திரேலியா அரசு அறிவித்தது.

1940 : ஒரு படுதோல்வியைப் பெரு வெற்றியாக மாற்றிய நிகழ்வு இரண்டாம் உலக மகாயுத்தத்தில் நிகழ்ந்தது. ஜேர்மன் இராணுவத்தால் பெல்ஜியத்திலிருந்து மேற்கு நோக்கித் தள்ளப்பட்ட பிரான்சிய, பிரிட்டிஷ் படைகள் ஏறக்குறைய 340,000 வீரர்கள் டன்கர்க்கில் கூடினர். இவர்களை இங்கிருந்து அழைத்துச் செல்ல, பிரிட்டிஷ் கடற்படை பொறுப்பேற்ற டைனமோ படைநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆகக் கூடியது ஒரு லட்சம் படையினரை மட்டுமே பாதுகாப்பாக மீட்டெடுக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ஜேர்மனியின் கடுந்தாக்குதல்களுக்கு மத்தியிலும், சின்னஞ்சிறு படகுகள், கட்டுமரங்கள், கப்பல்கள் என்பன ஆயிரக்கணக்கில் பயன்படுத்தப்பட்டு, துணிவுடன் அவை இடைவிடாமல் பணியாற்றியதால் 338200 படையினரைக் காப்பாற்ற முடிந்தது. இந்த நடவடிக்கையில் 80 கப்பல்களை ஜேர்மனி மூழ்கடித்தது.

1942 : பிரிட்டன் - ரஷ்யாவுக்கு இடையிலான இருபது வருட ஒத்துழைப்பு உடன்படிக்கை லண்டனில் கையெழுத்திடப்பட்டது.

1944 : பல்கேரியாவை ஜேர்மனி கைப்பற்றிக் கொண்டது.

1952 : அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளது பிரதிநிதிகள் பான் நகரில் ஒன்றுகூடி, ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி நேச நாடுகளது ஆதிக்கத்தில் இருந்து மேற்கு ஜேர்மனி விடுபட்டுக் கொண்டது.

1960 : அமெரிக்கா - ஜப்பான் பாதுகாப்பு உடன்படிக்கையை எதிர்த்து டோக்கியோ நகரில் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின.

1966 : கைரேகைப் பதிவின் மூலம் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது போல, குரல் பதிவின் மூலமும் குற்றவாளிகளை இனம்கண்டறிய முடியும் என்பது முதன் முதலாக உறுதிப்படுத்தப்பட்டது.

1980 : சோயுஸ் - 36 என்ற விண்கலம் ரஷ்யாவால் விண்ணில் ஏவப்பட்டது.

1982 : தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் ஆதரவு நல்கிய ஆதரவாளர்களான அளவெட்டியைச் சேர்ந்த இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோர் கொல்லப்பட்ட நாள்.

1987 : வடமராட்சிப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் நோக்கோடு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒபரேசன் லிபரேசன் படை நடவடிக்கையின் ஆரம்ப நாள். மாலை கொழும்பில் இலங்கை வங்கியின் தலைமைச் செயலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும்வரை இப்படை நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

1988 : எயிட்ஸ் நோய் பற்றிய குறிப்புகள், கண்நோய் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் கொண்ட பிரசுரம் அமெரிக்க அரசினால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதாவது 20.6 கோடி குடும்பங்களுக்கும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

1993: இம்மாதம் முதலாம் திகதி மரணமடைந்த பிரதமர் ஆர். பிரேமதாஸவிற்குப் பதிலாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமனம் செய்யப்பட்டார்.

தொகுப்பு சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு.
திருக்குறள்

# நமது நோக்கு

## கொலைக்களமாக்க முயற்சி

திருகோணமலையில் அண்மைக்காலமாக நடந்தேறும் சம்பவங்கள் - தமிழருக்கு எதிரான இன்னொரு இனக்கலவரத்துக்கான தூண்டுகோலாகவோ, நான்காம்கட்ட ஈழப்போருக்கான ஒரு பொறியாகவோ அமைந்துவிடுமோ என்ற அச்சம் பல்வேறு தரப்பினரிடமும் தொற்றிக்கொண்டிருக்கிறது.

இப்போதெல்லாம் வழியில் யாராவது இரண்டு பேர் சந்தித்துக்கொண்டால் - 'திருகோணமலை நிலைமை என்னவாம்' என்று கேள்வி கேட்டு திரும்பவும் சண்டை வந்துவிடுமோ என்று அச்சத்துடன் வினவும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தளவுக்கும் காரணம் - அண்மையில் திருகோணமலை நகரில் முளைத்த புத்தர்சிலைதான். 'திருகோணமலையை ஒரு கொதிகளமாக'– கொலைக்களமாக்க போர்நிறுத்த உடன்பாட்டின் பின்னர் எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் ஆகப் பிந்தியதுதான் புத்தர் சிலை விவகாரம். போர்நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த பின்னர் மணிராசன்குள விவகாரத்தை ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் கிளப்பியது.

ஆனால், அது பிசுபிசுத்துப்போக கண்காணிப்புக் குழுவுக்கு எதிரான போராட்டம், தமிழர்களுக்கு எதிரான ஹர்த்தால் என்று அவ்வப்போது திருகோணமலையில் தமிழின அழிப்பை மையப்படுத்தி வன்முறைகள் தூண்டப்பட்டு வந்திருக்கின்றன.

சுனாமியின் பின்னர் கூட ஜே.வி.பி முற்றவெளி மைதானத்தில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ இரவோடிரவாக முயற்சித்து, பின்னர் தமிழ்மக்களின் எதிர்ப்பால் அதுவும் பிசுபிசுத்துப்போனது.–

திருகோணமலை மாவட்டத்தைச் சிங்கள மயப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சக்திகளே தமிழருக்கு எதிரான வன்முறைகளைத் தீவிரப்படுத்துவதில் இறங்கியிருக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி.போன்றவற்றின் தூண்டுதலின் பேரில் நிறுவனமயப்படுத்தப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாத இயக்கம் திருகோணமலையில் முனைப்புப்பெற்றுவருகிறது.

இதைத் தனியே சிங்கள மயப்படுத்தும் திட்டமாக மட்டும் கருதிவிடக்கூடாது.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் நோக்குடனான ஒரு நடவடிக்கையாகவும் இதைக் கருதவேண்டியுள்ளது.

புத்தர்சிலை விவகாரம் ஏதோ ஒரு மதம் சம்பந்தப்பட்ட உணர்வின் வெளிப்பாடாகக் கருதமுடியாதளவுக்கு நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.

போதி மரத்தின்கீழ் அமர்ந்து ஆசாபாசங்களைத் துறந்து பரிநிர்வாணமடைந்த புத்தரைச்சுற்றி சிங்கள பௌத்த பேரினவாதிகளின் ஆயுதப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தும், அதன் தொடராக நடந்த வன்முறைகளும் மதரீதியான நிகழ்வுகளின் தோற்றப்பாட்டைத் தரவில்லை.

தமிழ் மக்களை வேண்டுமென்றே வம்புக்கு இழுத்து அழிப்பதுதான் இவர்களின் திட்டமாக இருக்கிறது. வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற பிரதேசமாகவும், தமிழரின் தலைநகராக குறிக்கப்படுவதுமான திருகோணமலையை தம்வசப்படுத்துவதுதான் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் குறி.

அத்துடன், திருமலையிலிருந்து தமிழ்மக்களை விரட்டியடித்துவிட்டால் வடக்கையும் - கிழக்கையும் பிரித்து - தமிழ்த் தேசியத்தை சிதைத்துவிடலாம் என்று இந்தச் சக்திகள் கனவுகண்டுகொண்டிருக்கின்றன.

இந்தப் பிரதான இலக்கு நோக்கித்தான், புத்தர் சிலை போன்ற பிரச்சினைகளை அவ்வப்போது இவர்கள் தூண்டிவருகின்றனர்.

பேரினவாத சக்திகளுக்கு தீனிபோடும் வகையில் அரச இயந்திரமும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இவையெல்லாம், நடைமுறை சமாதான முயற்சிகளை மேலும் பின்தள்ளி நெருக்கடியானதொரு நிலையை உருவாக்கும் என்பது மட்டும் சந்தேகமில்லை.

# நாடும் நடப்பும்




நன்றி:- டெய்லி மிரர்

### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

## போரைத் தூண்டும் முயற்சியை படையினால் அடக்கலாமே!

திருகோணமலைச் சம்பவம் போரை நோக்கிய ஒரு செயற்பாடு என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கூறியிருப்பதைக் கவனித்தீரா என்று கேட்டபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

இரத்தினபுரியில் நடந்த சரத் முத்தெட்டுவேகமவின் பத்தொன்பதாவது நினைவுதினக் கூட்டத்தில் நிதி அமைச்சர் பேசியது பற்றிக் கேட்கிறீரா? இலங்கையில் இனப்பிரச்சினை துளிர்விட ஆரம்பித்த காலத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இனப்பிரச்சினைக்கு முடிவுகட்டவேண்டுமென்று சரத் முத்தெட்டுவேகம கேட்டிருந்தாரென்றும், அன்றைய கட்சித் தலைவர்கள் இதைக் கவனத்தில் எடுக்கவில்லையென்றும், இதே கூட்டத்தில் அமைச்சர் சரத் அமுனுகம கூறியிருப்பதையும் பார்த்தேன்.

இன்னுமொரு முக்கிய விடயத்தையும் அவர் சொல்லியிருக்கிறார். விடுதலைப் புலிகள் இன்று போரை நோக்கிச் செல்லாதுள்ளனர். இவ்வாறான நிலையில் நாம் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார் என்றேன்.

சில சமயங்களில் நாட்டின் தலைவியும், அரசின் தலைவியுமான சந்திரிகா அம்மையாரும், பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும் பொறுப்புடன் நாட்டின் நலனையும், முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு நல்ல கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். இவற்றைக் கேட்டதும் ஆகா நமது நாட்டுத் தலைவர்கள் நல்லமுறையில் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். இனி நாட்டில் அமைதியைக் காணமுடியுமென்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனால் இந்தப் பேச்சுக்கள் எந்தவித செயலுக்கும் வழிவகுப்பதில்லை; இவர்கள் சொன்னதையே மறந்து அதற்கு எதிர்மாறாகவும் நடந்துகொள்கிறார்கள் என்று சொன்னார் பரமசிவம்.

திருகோணமலையில் புத்தர்சிலையை நிச்சயமாக விடுதலைப் புலிகள் இரவோடிரவாகக் கொண்டுவந்து மணிக்கூட்டுச் சந்திக்கருகில் அதுவும் அரசமரமே இல்லாத இடத்தில் வைக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். காவல்துறையினரிடமோ, நகரசபையிடமோ இந்தச் சிலையைக் கொண்டுவந்து வைப்பதற்கு எவரும் அனுமதி பெறவுமில்லை.

சட்டவிரோதமாகக் கொண்டுவந்து வைத்த சிலையை உடனடியாகவே காவல்துறையினர் அப்புறப்படுத்தி திருமலையிலுள்ள ஒரு புத்த விகாரைக்குக் கொண்போய் வைத்திருக்கலாம். இப்படிச் செய்யாதபடியால்தான் திடீர் புத்தர்சிலைக்கு ஆட்சேபம் தெரிவித்து மக்கள் கடையடைப்பு, ஹர்த்தால் என்று அமைதியான எதிர்ப்பைத் தெரிவித்தனர். வெசாக் கொண்டாட்டங்களையொட்டிக் கடையடைப்பு எதிர்ப்பையும் ஒத்திவைத்தனர் என்றேன்.

இந்த நல்லெண்ணத்தைக்கூடப் புரிந்துகொள்ளமுடியாத இனவாத ஊடகங்கள் புலிகள்தான் கடையடைப்பு, ஹர்த்தால் என்று தூண்டிவிட்டனர், குண்டெறிந்தனர், வெசாக் பண்டிகைக்கு ஹர்த்தாலை ஒத்திவைத்து நல்லவர்கள்போல் நடிக்கின்றனர். இவர்கள் தலதா மாளிகையைத் தாக்கிய சம்பவங்களையெல்லாம் மறந்துவிடமுடியுமா என்று செய்திகள் வெளியிடுகின்றன.

இங்குதான் நிதி அமைச்சர் சொன்ன ஒரு கருத்து முக்கிய இடம்பெறுகிறது. விடுதலைப்புலிகள் இன்று போரைநோக்கிச் செல்லாதுள்ள நிலையில் இனவாதத்தைத்தூண்டும் செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் சொன்னதைத்தான் குறிப்பிடுகிறேன். சில ஊடகங்கள் இனவாதத்தையே தூண்டிவிட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த ஊடகங்கள் தங்கள் வருமானத்துக்காக இவற்றைச் செய்யலாம்.

ஆனால் நாட்டை நாசமாக்குகிறார்களென்பதை அவர்கள் கருதுவதில்லை. இனப்பிரச்சினை மிக மோசமாக நாட்டில் இனத்துவேஷமாக வளர்வதற்கு இந்த ஊடகங்களே முழுக்கமுழுக்கக் காரணமாகும். சமீபத்தில் ஒரு அமைச்சர் தமிழ் ஊடகங்களைக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஒவ்வொருநாளும் அது சமாதானகாலமாக இருந்தாலும், போர்க்காலமாக இருந்தாலும் புலிகள் மீதும், தமிழ் மக்கள் மீதும் துவேஷத்தைக் காட்டும் செய்திகளையும், கருத்துகளையும் சிங்கள இனவெறி ஊடகங்கள் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டே இருக்கின்றன என்றார் பரமசிவம்.

உள்நாட்டில் செய்யும் பிரசாரம் போதாதென்று விருந்தாளிகளாகப்போய்த் தங்கிநிற்கும் ஜப்பானிலும்கூட ஜாதிக விமுக்தி பெரமுனத் தலைவர்கள் புலி எதிர்ப்புப் பிரசாரம்தான் செய்கிறார்கள். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆயுதம் ஏந்தி, புனித தலதா மாளிகையுள் நுழைந்துகூடத் தாக்குதல் நடத்தியும், வேறு பல இடங்களில் தாக்குதல் நடத்தியும், பயங்கரமாகப் பல ஆயிரம்பேரைக் கொலைசெய்த ஜே.வி.பியினர் விடுதலைப்புலிகளை இன்று பயங்கரவாதிகள் என்று பிரசாரம் செய்கின்றனர் என்றேன்.

திருகோணமலை புத்தர்சிலைச் சம்பவம் போரைத் தூண்டிவிடும் முயற்சியே என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளதென்று கூறும் நிதி அமைச்சருக்கு, இதன் பின்னணியில் நிற்பவர்கள் யார் என்பது தெரியாமலிருக்க முடியாது. இவர்கள் மீது ஏன் துணிந்து நடவடிக்கை எடுக்கக்கூடாது. புலிகள் போர் தொடங்கமாட்டார்களென்பது அரசுக்குத் தெரியும். இங்கு குவித்துவைத்திருக்கும் படைகளைத் தெற்கே கொண்டுபோய்ப் போரைத் தூண்டும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாமே என்றபடி புறப்பட்டார் பரமசிவம்.

அதிகார ஆசையே இலங்கையில் இனப்பிரச்சினையை உருவாக்கியது, அதிகாரவெறியே இனத்துவேஷத்தை இன்றும் தூண்டி வளர்த்துவருகிறது. அதிகாரப் போட்டியை நிறுத்தி சிங்களப் பெரும்பான்மை அரசியல் கட்சிகள் தமக்குள் ஓர் உடன்பாடு செய்துகொள்ள முன்வரவேண்டும்.

அதிகாரப் போட்டி இருக்கும்வரை நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படுவது சுலபமல்ல, இனப்பிரச்சினையும் தீரமாட்டாது. முதலில் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றுகூடி தேசியப் பிரச்சினைகளில் ஒருமித்த கருத்தை எட்டுவதே முக்கியம் என்று சொன்னபடி போனார் பரமசிவம்.

### வாசகர் நோக்கு...

## நிரந்தர நியமனம் கிடைக்குமா?

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பல வருடங்களாக பதில் காவலாளி, பதில் தொழிலாளி, பதில் சுகாதாரத் தொழிலாளிகளாகப் பணிபுரியும் எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரச அதிகாரிகள் முன்வருவார்களா?

நாம் பணிபுரியும் திணைக்களங்களில் நிரந்தர நியமனத்துக்கான வெற்றிடம் இல்லையாயினும், வேறு திணைக்களங்களில் ஏற்படும் நிரந்தர வெற்றிடங்களுக்கு எமக்கு முன்னுரிமை கொடுத்து நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளே! வறுமையில் வாடும் எங்களுக்காகவும் ஒருகணம் சிந்தியுங்கள். எங்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுங்கள்.

பதில் ஊழியர்கள்.

கல்வியியல்

ஆர்.கே.மேனன்

# கல்வியில் வெறுப்புநிலையை ஏற்படுத்தும் தரம் - ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை

மாணவர்களின் கல்வி நிலையை முதற்படியாகத் தீர்மானிக்கின்ற ஒரு மதிப்பீட்டுக் கருவியாக இதுவரை காலமும் விளங்கிவருவது தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையாகும்.

இந்தப் பரீட்சையானது- பலவழிகளில் கல்வி நிர்வாகத்துக்கும், ஏனைய கல்வி சமூகத்தினருக்கும், பொருளாதார வசதி குறைந்த குடும்பங்களுக்கும் உதவியளிக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

மாணவர்களது முதற்படி முன்னேற்றத்துக்கு ஒரு உந்து சக்தியாகத் தொழிற்படும் இந்தப் பரீட்சையானது, பல பொருளாதார வசதி குறைந்த குடும்பங்களுக்கும் உதவிப் பணத் தொகை மூலமும், மாணவர்களின் முதல் வெற்றிக்குரிய ஊதியம் என்ற உணர்வையும் தரம்-5 பரீட்சை பெறுபேறுகள் அனுகூல விளைவுகளாக அமைவதை யாரும் மறுக்கமுடியாது.

இது ஒரு புறமிருக்க, புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறைக் கண்ணோட்டத்தோடும் இதைப் பார்க்கவேண்டிய தேவை தற்போது மேலோங்கியுள்ளது. எந்தவொரு செயற்பாட்டுக்கும் சாதக, பாதக விளைவுகள் நிச்சயம் இருக்கத்தான் செய்யும்.

ஆனால், அவற்றை ஒப்புநோக்கல் ஆய்வுகளின் அடிப்டையிலும், மாறிவரும் மாணவ திறன் விருத்தி அடிப்படையிலும், அதில் மாற்றங்களைச் செய்து சீரமைத்துக் கொள்ளவேண்டிய தேவை, மாறிவரும் சமூகக் கட்டமைப்பில் இன்றியமையாததொன்றாகும்.

அந்த வகையில் தற்கால மாணவர்கள் மத்தியில் இந்தப் புலமைப் பரிசில் பரீட்சை விளைவுகள் பாரிய பாதக விளைவு நிலையை உருவாக்குகிறது. இது பற்றிச் சற்று விரிவாக ஆராய்வதன் ஊடாக எமது கல்வியியல் சமூகத்தினர் இதில் ஓரளவு மாற்றத்தைக் கொண்டு வர முன்வருவர் என்பதே இந்த ஆக்கத்தின் ஆதங்கமாகும்.

## பெற்றோர்களின் திணிப்பு முயற்சி

பொதுவாகப் பிள்ளைகளைப் படிப்பதற்காக வன்மையாகத் திணிக்கின்ற முயற்சியென்பது உளவியல், கல்வி உளவியல் பற்றிய அறிவு இல்லாது பெற்றோர் செய்யும் மிகக் கொடூரமான முயற்சி என்றுதான் கூறவேண்டும்.

இப்படிப்பட்ட கற்றல் செயற்பாட்டை அல்லது கற்பித்தல் செயற்பாட்டை வன்மையாகப் பெற்றோர்கள் பிள்ளைகளிடத்தில் திணித்தல் என்பது தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தான் இடம்பெறுகிறது.

இது மிகப் பெரிய தவறு. வேறு பிள்ளைகளோடு எமது பிள்ளைகளை ஒப்பிடுதல், அது போன்று வரவேண்டும் என முயற்சித்தல், எமது எதிர்பார்ப்புகள், ஆசைகளைப் பிள்ளைகள் நிறைவேற்றவேண்டும் என ஆசைப்படுதல் போன்ற செயற்பாடுகளே - இவ்வன்மையாகப் பிள்ளைகளை கற்பித்தல் செயற்பாட்டில் திணித்தல் என்கிற செயற்பாட்டுக்கு வித்திடுகிறது.

அதிகாலை 4 மணிக்கு கடிகார ஓசையை காதில் ஏந்தி எழும்புகின்ற அந்தப் பிஞ்சு உள்ளம், காலை 6 மணிவரை கண் மயங்க.... மயங்க... தந்தையின் கட்டளைக்கிணங்க கற்றுவிட்டு அவசர அவசரமாக உடையணிந்து அடுத்த ஊர் தாண்டிப் போகின்றான் அருமையான ஆசிரியர் என்பதால். அது 7.30 மணிக்கு முடிவடைய, வீடு வந்து அரை வயிற்றை நிரப்பிவிட்டு ஓடுகிறான். பாடசாலை ஆசிரியரின் அதிகாலை விசேட வகுப்புக்கு. அதையும் நிறைவுசெய்து தொடர்ந்து 2.30 மணிவரை பாடசாலை. பின்பு 3.30 மணிவரை பாடசாலையில் பரீட்சையையொட்டி எடுக்கப்படும் விசேட வினாத்தாள் பரீட்சை.

பின்பு 4.00 மணிக்கு ஓடிவருகிறான் வீட்டிற்கு. ஏனெனில் விசேட வகுப்புக்காக ஆசிரியர் வீட்டில் காத்திருப்பார் என்பதற்காக. மீண்டும் அரைவயிறு உணவுடன் அமர்கின்றான். ஆசிரியர் இருக்கும் மேசையில் அந்தப் பிஞ்சு உள்ளம் "களை" ஒரு புறம், "பசி" ஒருபுறம், "படிப்பு" சுமை ஒருபுறம் பாவம் அவன்.

ஆசிரியர் மணித்தியாலப் பணத்துக்காக 2 மணிநேரம் அவனை எழும்ப விடவில்லை. 6 மணிக்கு வாத்தியாரின் பிரசங்கம் நிறைவுபெறுகிறது.

வாத்தியார் போனதும் அம்மா தேநீர் கொண்டுவந்து கொடுக்கின்றாள். அதனைக் குடித்துவிட்டு பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் விளையாடும் சத்தத்தைக் கேட்டதும் ஆவலுடன் திண்ணைக்குமேல் எட்டிப்பார்க்கிறான்.

அந்த நேரம் பார்த்து அப்பா வேலை முடிந்து வருகிறார். என்ன தம்பி "என்ன நடக்குது? முகத்தைக் கழுவி விட்டு வந்து படி" என்கின்ற அப்பாவின் குரலோசை வீட்டுக் கேற்றடியிலே கேட்கிறது. பிள்ளை ஓடிப் போய் முகத்தைக் கழுவிவிட்டு உணர்வுகள், ஆசைகளை அடக்கிவைத்து விட்டு அமர்கிறான்.

மேசையில் அக்கா வந்து என்ன படிக்கிறாய் என்று கேட்டுப் பயிற்சிகள் கொடுத்துவிட்டுப் போகிறாள். சிறிதுநேரம் கழித்து அப்பா வருகிறார்.

''இந்தா தம்பி வருகிறபோது 'பொண்ட் பேப்பர்' வேண்டி வந்தேன். உடன இப்ப செய்துபார்" என்கிறார். அக்கா கொடுத்த பயிற்சி நிறைவுபெறவில்லை. அப்பாவின் கட்டளைக்காக இதைச் செய்கிறான்.

அம்மா இரவுச் சாப்பாட்டோடு வருகிறாள். சாப்பிடுகின்ற சிறிது நேரமென்றாலும், புத்தகம் பார்க்கத் தேவையில்லை என்கின்ற நிம்மதியில் ஓடி வருகிறான். அம்மா இடைமறித்து "இல்லை... இல்லை நான் தீத்தி விடுகிறேன் நீ படித்துப் படித்து சாப்பிடப்பன்" என்கின்றாள்.


''என்ன கொடுமையப்பா இது'' எனத் தனக்குள்ளே நொந்துகொண்டு, மீண்டும் மேசையில் அமர்கின்றான். சாப்பாடு முடிகிறது. சிறிது நேரத்தில் மீண்டும் அக்கா வருகிறாள்.

"என்ன தம்பி பயிற்சி செய்துவிட்டாயா?'' ''இல்லையக்கா அப்பா வேலை தந்தவர்" என முணுமுணுக்கிறான். "எனக்குத் தெரியாது தம்பி. நாளைகாலை உனது பயிற்சிக்கேள்வி கொடுத்து ஆசிரியரிடம் புள்ளிபோட்டுப் பார்க்கவேண்டும். இன்று இரவு செய்துமுடித்துத்தரவேண்டும்'' என்றாள் அக்கா.

பாவம் பிள்ளை 11 மணிவரை இருவருடைய வேலைகளையும் செய்து முடித்து விட்டுப் படுக்கிறான். மீண்டும் 4 மணிக்கு பழைய பல்லவி தொடங்குகிறது.

இப்படியே நாட்கள் உருண்டோடின. பரீட்சை வந்தது. பிள்ளைக்கு 3 மணிநேர நித்திரை மட்டும்தான். பரீட்சைப் பீதி ஒருபுறம், சற்றுத் தவறினால் வீட்டில் தப்பமுடியாது என்கின்ற நடுக்கம் மறுபுறம்.

இப்படியே பயந்து பயந்து பரீட்சையும் முடிந்து பெறுபேறும் வந்தது. பிள்ளை பரீட்சையில் சித்தியடைந்து



விட்டான். அனைவருக்கும் ஆத்ம திருப்தி. வீடே கலகலப்பு. தந்தைக்கு என்னசெய்வது என்று தெரியவில்லை. "எனது பிள்ளை எனது மானத்தைக் காத்துவிட்டான்" என்கின்ற பெருமை வார்த்தைகள்.

நாட்கள் உருண்டோடின. புலமைப் பரிசில் பரீட்சை சித்திபெற்றவன் - தரம் 7 இல் அவனது தரமும் தாழ்ந்தது.

புத்தகம் தூக்குவதென்றால் அவனுக்கு வெறுப்பு உண்டானது. மேற்படிப்பைத் தொடர அவனால் முடியவில்லை. பாடசாலையில் வெறுப்பு, படிப்பிக்கும் ஆசானில் வெறுப்பு. இப்படியே போனது அவன் நிலை. அவனை மாற்றப் பெற்றோர்கள் பலவாறு முயன்றும் முடியவில்லை.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைய அவனால் முடியாது போய்விட்டது. பெற்றோரின் விளக்கமற்ற, இப்படிப்பட்ட நடத்தைகளால் தற்போது பல மாணவர்கள் படிப்பைத் தொடரமுடியாது வீதியில் சுற்றுகின்றனர். இதுபற்றிச் சற்றுச் சிந்திக்கவேண்டியுள்ளது.

எந்தவொரு ஆளணி வர்க்கத்துக்கும் ஒரு கொள்ளளவம் என்கின்ற அம்சம் உண்டு. இதனை ஆங்கிலத்தில் **Capacity** என அழைப்பர்.

அதாவது இந்தக் கொள்ளளவத்தை விட அளவுக்கதிகமாகப் புகுத்தப்படும்பொழுது - கூடுதலாகப் புகுத்தப்படும் அம்சத்தில் வெறுப்புநிலை விஸ்வரூபம் எடுக்க ஆரம்பிக்கும். இது பின்பு குறிப்பிட்ட நபரை அந்த விடயத்தில் பின்பு அணுகவிடாது. இதுதான் மனித மனநிலை அம்சம்.

இதேபோன்றுதான் இந்தப் புலமைப்பரிசில் பரீட்சையிலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தமது எதிர்பார்ப்பை நிறைவேற்றவேண்டும், மற்றப்பிள்ளைகள் போன்று துலங்க வேண்டும் என எதிர்பார்த்து அளவுக்கதிகமாக பிள்ளைகளுக்கு திடீரென கல்வியைப் புகுத்த முயற்சிக்கின்றனர். இது தவறு.

தரம் 5 இல் இருக்கும் எல்லாப்பிள்ளைகளும் குறிப்பிட்ட அந்தப் பருவத்தில், இந்தப் பரீட்சைக்குரிய விசேட திறனைப் பெற்றிருப்பார்கள் என எதிர்பார்க்கமுடியாது.

ஏனெனில்- இந்தத் திறன்விருத்தியானது ஆளுக்காள் வேறுபடும். அவன் வாழும் சூழல், பெற்றோர்களின் ஆளுமை, அறிவுவிருத்தி போன்ற அம்சங்களால் இது வேறுபடலாம்.

இந்த வேறுபடும் திறன்விருத்தியை மெதுமெதுவாகத்தான் சமப்படுத்தி, மேம்படுத்தவேண்டும். இதற்கு நீண்டகால இடைவெளிவேண்டும்.

ஆனால், நாமோ எமது பிள்ளைகளின் நிலைபற்றித் தெரியாது, எல்லோரையும் போன்று எமது பிள்ளையும் விளங்கவேண்டும், இந்தப் பரீட்சைகள் மூலம்தான் எமக்குப் பெருமையுண்டாகும் என அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு, பிள்ளைகளுக்குப் படிப்பைத் திணிக்க முற்படும்போது, பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைக்குப் பின்பு படிப்பில் வெறுப்பான மனநிலை உண்டாகி, படிப்பைத் தொடரமுடியாத சூழ்நிலை உருவாகிறது.

ஆகவே, பெற்றோர்கள் இதில் கவனமெடுக்க வேண்டும். பிள்ளைகளின் வாழ்க்கைக்காகத்தான் கல்வி. எமது சந்தோஷங்களுக்காக அவனது எதிர்காலத்தையே பாழாக்கக்கூடாது.

திறன் உள்ளவன் பரீட்சையில் வெற்றிபெறட்டும். திறன் குறைந்தவனைப் படிப்படியாக மேல் வகுப்புகளில் வேறு செயற்பாடுகளினூடாக மேல்நிலைக்குக் கொண்டுவருவதே புதிய கல்வியமைப்பின் திட்டமாகும்.

"மாணவர் ரீதியான ஒப்பீடு'' என்பது புதிய கல்வியமைப்பில் அடியோடு மறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட திறன்விருத்தி இருக்கும். அதை மேம்படுத்துவதே எமது கல்விச் சமூகத்தின் கடமை.

இதை ஒப்பீட்டு ரீதியாகப் பார்த்துச் செயற்பட்டு, பிள்ளையை கல்வியில் வெறுப்பு நிலையை உண்டு பண்ணிவிடாதீர்கள்.

# புகழ்பெற்ற நடிகர் சுனில்தத் மாரடைப்பால் நேற்று மரணம்



(புதுடெல்கி)

இந்திய மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும் புகழ்பெற்ற நடிகருமான சுனில் தத் நேற்றுக் காலை மும்பையிலுள்ள அவரது பாந்த்ரா இல்லத்தில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 76.

சுனில் தத் 1929 ஜூன் 6இல் தற்போது பாகிஸ்தானில் உள்ள குர்து கிராமத்தில் பிறந்தவர். இவர் புகழ்பெற்ற இந்தி நடிகர் சஞ்சய் தத்தின் தந்தையும், பழம்பெரும் நடிகை நர்கீஸின் கணவரும் ஆவார்.

இவர் முதன்முதலில் 1984 ஆம் ஆண்டு தெற்கு மும்பையில் போட்டியிட்டு புகழ்பெற்ற வழக்கறிஞர் ராம்ஜெத்மலானியைத் தோற்கடித்து மக்களவை உறுப்பினரானார். அதன் பின்னர் 1989 மற்றும் 1991 மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.

1996 மற்றும் 1998 இல் நடந்த மக்களவைத் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.

கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் சிவசேனைத் தலைவர் சஞ்சய் நிருபமைத் தோற்கடித்து நான்காவது முறையாக மக்களவை உறுப்பினரானார்.

இவர் ரயில்வே பிளாட்பாஃம், மதர் இந்தியா, சாதனா, முஜே ஜீனே தோ, யாதீன், கும்ராஹ், வக்த், ஹம்ராஸ் போன்ற புகழ்பெற்ற இந்திப்படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார்.

தனது நீண்டகால நண்பர் விது வினோத் சோப்ராவின் வேண்டுகோளை ஏற்று தனது மகன் சஞ்சய் தத்துடன் 'முன்னா பாய் எம்.பி.பி.எஸ்' திரைப் படத்தில் நடித்தார். இதுவே அவர் நடித்த கடைசித் திரைப் படம்.

பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ் பொற்கோவில் இராணுவ வசத்துடன் உட்பட்டபோது அதனைக் கண்டித்தும், அமைதி திரும்ப வேண்டியும் மும்பையிலிருந்து அம்ரிட்சர் வரை பாதயாத்திரை மேற்கொண்டார்.

1993 ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற மதக்கலவரங்களைக் கண்டித்து தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளாகியதில் நால்வர் பலி!



பிலிப்பைன்ஸ் நாட்டு இராணுவ விமானத் தளம் லுகான் மாகாணத்தில் உள்ளது. இங்குள்ள விமானப்படை வீரர்களுக்கு அமெரிக்க ராணுவத்தினர் பயிற்சி அளித்து வருகின்றனர். இந்த விமானப்படைத் தளத்தில் இருந்து பயிற்சி விமானமொன்று புறப்பட்டுச் சென்ற வேளை நடுவானில் திடீர் கோளாறு ஏற்பட்டது.

விமானத்தை விமானி உடனடியாக தரையிறக்க முயன்ற போதிலும் அது கட்டுப்பாட்டை இழந்து அங்குள்ள மலையில் மோதியது. மோதிய வேகத்தில் அந்த விமானம் பயங்கரமாக வெடித்து சிதறியது.

அந்த விமானத்தில் இருந்த உயர் இராணுவ அதிகாரிகள் 4 பேர் பலியாகினர். அவர்களது உடல்களை மீட்க ஹெலிகொப்டரில் மீட்பு படையினர் விரைந்துள்ளனர். பலியானவர்கள் அமெரிக்க அதிகாரிகளா? அல்லது பிலிப்பைன்ஸ் நாட்டவர்களா என்பது அறிவிக்கப்படவில்லை. இதில் நாசவேலை எதுவும் இல்லை என்று பிலிப்பைன்ஸ் இராணுவம் தெரிவித்துள்ளது.



மருத்துவ அதிசயம்; வயிறு இடுப்பு ஒட்டிப்பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகளுக்கு சிங்கப்பூர் கிளனீகில்ஸ் வைத்தியசாலையில் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டு தனித்தனியாக பிரிக்கப்பட்டன. அபாய கட்டத்தை தாண்டியதன் குழந்தை அஞ்சலியை முத்தமிடும் தந்தை சோபரி.( அடுத்த படம் ) மற்றொரு குழந்தை ஆஞ்சியை கொஞ்சி மகிழும் தாய் அர்மெய்னி.

# மிகச்சிறந்த 100 படங்களில் நாயகனும் இடம்பிடித்தது!



உலகின் மிகச்சிறந்த 100 படங்களில் கமலஹாசன் நடித்த நாயகன்படமும் இடம்பெற்றுள்ளது. கடந்த 1927ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டுவரை உலக நாடுகள் அனைத்திலும் இருந்து வெளிவந்த படங்களில் மிகச்சிறந்த 100 படங்களை அமெரிக்காவின் ரைம் பத்திரிகை தேர்ந்தெடுத்துள்ளது.

அந்தப் பத்திரிகையின் இணையத் தளத்தில் உலகிலேயே சிறந்த 100 படங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அதில் கமல்ஹாசன் நடித்து மணிரத்தினம் இயக்கிய நாயகன் படமும் ஒன்று. தந்தையை கொலை செய்தவனை குத்திக் கொலை செய்துவிட்டு மும்பைக்கு தப்பி வரும் வேலு என்ற சிறுவனை பற்றிய கதை இது.

அந்த சிறுவன் வேலுநாயக்கர் என்ற பெயரில் மிகப்பெரிய தாதாவாக வளர்ந்து காதல் மணம்புரிந்து குழந்தைகளை பெற்று தாத்தா ஆகி அவரிடம் உதவி பெற்ற ஒருவனால் கொல்லப்படுவது நாயகன் படத்தின் கதை.

மணிரத்தினம் இயக்கிய படங்களில் மறக்கமுடியாத படம் இது. அவர் கதை சொன்ன விதமும் ஒளிப்பதிவு செய்த விதமும் ஹொலிவுட் இயக்குநர்களை பொறாமைப்பட செய்ததாக ரைம் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. சத்யஜித்ரேயின் அபு திரி லாஜி, குருதத்தின் பியாசா ஆகிய படங்களும் அந்தப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

இந்திய சினிமாவில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய படம் அபுதிரிலாஜி. பியாசா இதயத்தை ஊடுருவிய காதல் கதை. இந்தப்படத்தின் சிறப்பு அம்சமாக எஸ்.டி.பர்மனின் பாடல்கள் பேசப்பட்டன. மெட்ரோ பொலிஸ், டொட்ஸ் ஒர்த், சிட்சன்கானே, இகிரு, பெர்சோனா, சைனாடவுன், பல்ப் பிக்ஷன், டாக்டு ஹெர் போன்ற படங்களும் சிறந்த 100 படங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

# வெள்ளை மாளிகைமேல் பறந்த மற்றொரு மர்ம விமானம்

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மேலாக குட்டி விமானமொன்று பறந்தது. அதை இராணுவ ஜெட் விமானம் மடக்கி தரை இறக்கியது.

கடந்த 2 வாரத்தில் 2ஆவது முறையாக இது பேன்ற சம்பவம் நடந்துள் ளது. கடந்த 11ஆம் திகதி வொஷிங்டன் நகரில் ஜனாதிபதி புஷ் வசிக்கும் வெள்ளை மாளிகை இருக்கும் தடை செய்யப்பட்ட பகுதி மீது ஒரு சிறிய விமானம் வட்டமிட்டது. இந்த விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட விமானமாக இருக்கலாமோ என்று சந்தேகப்பட்ட அதிகாரிகள் உஷாராகி பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வெள்ளை மாளிகையில் இருந்த ஜனாதிபதி புஷ் குடும்பத்தையும், அதிகாரிகளையும் அங்கிருந்த பாதாள அறைக்கு அனுப்பி வைத்தனர். விமானப்படை விமானங்கள் சிறிய விமானத்தை வானில் மடக்கி வலுக்கட்டாயமாகத் தரையிறக்கின. இது நடந்து 13 நாட்களில் இது போன்ற இன்னொரு சம்பவம் கடந்த திங்கள் நடந்தது. தடை செய்யப்பட்ட பகுதியில் குட்டி விமானம் ஒன்று பறந்தது. அதிகாரிகள் இந்த முறை பரபரப்பு அடையவில்லை. வெள்ளை மாளிகையை காலி செய்யவில்லை இராணுவ உயர் அதிகாரிகளுக்கு தடை செய்யப்பட்ட பகுதியில் குட்டி விமானம் ஊடுருவி இருப்பதை தெரிவித்தனர். உடனே இராணுவ ஜெட் விமானம் வானத்தில் பறந்து அந்த குட்டி விமானத்தை மடக்கியது.

அதன் பிறகு அந்த விமானம் தரையிறக்கப்பட்டது. மேக மூட்டம் மற்றும் மழை காரணமாக இந்த விமானம் தெரியாமல் தடை செய்யப்பட்ட பகுதியில் புகுந்ததா என்பது தெரியவில்லை. இந்த விமானம் டென்னசியில் உள்ள நாக்ஸ்வில்லேயில் இருந்து வொஷிங்டனுக்கு புறப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## உலக நோக்கு

### அமெரிக்காவுடன் இராணுவ ஒத்துழைப்பு முறிந்துவிட்டது

### சிரியா அறிவிப்பு

தீவிரவாதத்திற்கும், தீவிரவாதிகளுக்கும் உதவி செய்து வருவதாக அமெரிக்கா அநீதியாக குற்றஞ்சாட்டி வருவதால், அந்த நாட்டின் இராணுவத்துடனான ஒத்துழைப்பை முறித்துக்கொள்வதாக சிரியா அறிவித்துள்ளது. அமெரிக்காவுக்கான சிரியா தூதர் இமாத் முஸ்தபா இதைத் தெரிவித்தார்.

கடந்த 10 நாட்களில் அமெரிக்க இராணுவம் மற்றும் உளவுப் படையுடனான அனைத்து தொடர்புகளையும் முறித்துக் கொண்டதாக அவர் கூறினார். சிரியா மீதுள்ள கசப்பை வளர விடுவது என்று புஷ் நிர்வாகம் முடிவு செய்துள்ளதால் அமெரிக்காவுடன் ஏன் நாங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டார்.

ஈராக் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தோம். லெபனானில் இருந்த துருப்புக்களை திரும்பப் பெற்றோம். இருந்தும் எங்களை அமெரிக்கா நம்பவில்லை என்று தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# 45 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

மலர்வு 11.06.1982



மலர்வு 17.04.2004



உதிர்வு 12.04.2005

பிறப்பிடம் : யாழ்ப்பாணம்
வசிப்பிடம் : சுவிஸ்

பிறப்பிடம் : சுவிஸ்

திருமதி உதயராஜ் குமுதினி

குடும்பத்தின் குலவிளக்கே!
குணக்குன்றே குமுதினியே!
நாட்கள் சில மறைந்தாலும் – உன்
அன்புமுகம் மறைந்திடுமோ?
என்றென்றும் நினைவுகளாய்
எம் நெஞ்சில் வாழ்ந்திருப்பாய்.

உதயராஜ் சபீனா

சபீனா பூவே உன் மரணத்தில்
உறைந்து போனோம்.
உன் மழலைப் புன் சிரிப்புகளை எங்கே காண்போம்?
மறுபிறவி என்றொன்று இருக்குமென்றால்
கண்ணே நீ பிறப்பெடுப்பாய்
எங்கள் வீட்டில்.

திருமதி உதயராஜ் குமுதினி, உதயராஜ் சபீனா என்பவர்கள் 12.04.2005 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணம் அடைந்துவிட்டதையிட்டு, இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச்செய்திகள் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் நேரில் கலந்துகொண்டு கவலையைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

சுவிஸ்.

துரைராஜ் - உதயராஜ்
(கணவன், தந்தை)

(1170)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

சிவராம் படுகொலை தொடர்பாக

# இராணுவ புலனாய்வுத்துறையிடம் விசாரணை நடத்த முடியாதாம்!

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பாக இராணுவ புலனாய்வுத்துறையினரிடம் விசாரணை நடத்தமுடியாதென்று இந்தக் கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் குற்றப்புலனாய்வுத் துறை பொலிஸ் அதிகாரி சரத் லுகொட தெரிவித்தார்.

பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கொலை வழக்குத் தொடர்பாக பல்வேறு நபர்களிடம் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தப்பட்டுவருகிறது. இராணுவ புலனாய்வுத்துறை மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைத்துக்கொண்டு அவர்களிடம் விசாரணை நடத்த முடியாது.

சிவராமின் நண்பர்கள், அவருடன் தொடர்பிலிருந்தோரிடம் மட்டுமே விசாரணைகள் நடத்தப்பட்டு வருகிறது. சிவராமுடன் கடைசி நேரத்தில் உடனிருந்த ஊடகவியலாளர்களிடமும் விசாரணை நடந்து வருகிறது.

சிவராமை கடத்திச் சென்ற வாகனம் குறித்தும் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கும் சிவராமின் கைத்தொலைபேசி குறித்தும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்தக் கொலைக்கான காரணம் குறித்து எவ்வித தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது என்றார்.

பொதுக்கட்டமைப்பு ஆவணத்தை

# நாடாளுமன்றில் சமர்ப்பிக்காமல் கைச்சாத்திட சந்திரிகா முயற்சி!

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஆவணத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கையொப்பமிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக, ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடுவதற்கு நிவாரண, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்குச்சென்று அங்கு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்திற்குரிய திகதி, இடம், நேரம் என்பன உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இதன்படி பொதுக்கட்மைப்பில் கைச்சாத்திடுவது குறித்து கொள்கையளவில் இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்தக் கலந்துரையாடல்களின் பெறுபேறுகள் குறித்து ஹரீம் பீரிஸ் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடுவதற்கு முன்னர் அரசுக்கு ஆதரவளித்துவரும் கட்சிகளுடன் விசேட கலந்துரையாடல்களை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (சே)

## ஜரோப்பிய...

விமானநிலையத்தை வந்தடைந்த இவர்கள், தரைவழியாக கிளிநொச்சியை சென்றடைந்தனர்.

பின்னர் காலை 10.30 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியற்துறையினரை – ஐரோப்பிய யூனியன் தூதுவர்கள் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன், மட்டு.- அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்கிரையன் ஆகியோர் பங்கேற்றனர்.

## ஜே.வி.பி...

பிற கட்சிகளின் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலொன்றை நாளையே நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் ஜே.வி.பியினருடன் நடத்தப்படும் கலந்துரையாடலின் பின்னர் பிறகட்சித் தலைவர்களுடன் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (சே)

# லங்கா சமசமாஜக் கட்சியும் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு!

உத்தேச சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு - நிர்வாகத்தை ஒப்படைக்கும் அலகேயன்றி, அரசியல் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் அமைப்பல்ல என்று லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுபோன்ற பொருத்தமான நடைமுறைகளை தாம் ஆதரிப்பதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் முறையாக நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும் அவை கிடைக்கக்கூடிய கட்டமைப்பு பொருத்தமானதாக இருக்குமென லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

சட்டத்திற்குப் புறம்பான

# கட்டடங்கள் மற்றும் சிலைகளை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு!

திருகோணமலையில் சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் சிலைகள் உள்ளிட்ட அனைத்து ஸ்தாபிதங்களையும் பொலிஸார் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருமலை மாவட்ட நீதிமன்றில் நேற்று இந்த விடயம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் மா.கணேசராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த உத்தரவை அடுத்து திருகோணமலை நகரில் பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களில் பொலிஸார் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் திருகோணமலை நகரில் பஸ்நிலையத்தில் புத்தர்சிலை அமைக்கப்பட்டதும் நீதிமன்ற உத்தரவின் பின்னரும் அது அகற்றப்படாதிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (10 -04)

## மாலதி...

இதனைத் தொடர்ந்து மாலதி படையணிப் போராளிகளின் கலை நிகழ்வுகள் பலவும் இடம்பெற்றன. இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் என பெருமளவானோர் பங்குபற்றினர்.

# இறுதி முடிவினை எடுப்பதற்கு..

இதன்படி இன்று தமிழ் மக்கள் பேரவையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வடக்கு – கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் நடத்தவிருந்த ஹர்த்தால் போராட்டம் அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 4.35 மணியளவில் வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தலைமையில் விசேட மாநாடு ஒன்று இடம்பெற்றது.

இதில் பிரதியமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தன, திருமலை மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், துரைரட்ணசிங்கம், தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன், இந்திரீஸ் அன்னதாஸ் அடிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தமாநாட்டின் முடிவுகள் தொடர்பாக நேற்றிரவு 8.15 மணியளவில் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில் -

நேற்றுக்காலை ஜனாதிபதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுடன் கலந்துரையாடியதன் பிரகாரம், எந்தச் சமூகமும் பாதிக்கப்படாது, இந்த விடயத்தில் நீதியான தீர்வினைக் கொண்டுவர அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இங்குள்ள சிங்கள சமூகத்தினருடன் கலந்துரையாடினார். தமிழ்மக்கள் சார்பான சகல பிரதிநிதிகளுடனும் நாம் மனந்திறந்து கலந்துரையாடினோம். இதன்படி எதிர்வரும் 2 ஆம் திகதிவரை ஹர்த்தாலை ஒத்திவைக்க தமிழ் மக்கள் பேரவையினர் ஆதரவு தெரிவித்துள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று நகரசபையின் விசேட ஆணையாளருக்கு வழங்குதல்.

நீதிமன்ற அறிவிப்பிற்கமைய சிலை அமைக்கப்பட்ட பிரதேசத்தில், எந்தவித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ள இடமளிக்கக்கூடாதென பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இங்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவிக்கையில் -

இந்தப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்க, ஜனாதிபதி சார்பில் இங்குவந்த அமைச்சர், ஆளுநர் மற்றும் அனைவரும் இந்த விடயத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நேற்றுக்காலை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியைச் சந்தித்து திருமலையின் தற்போதைய நிலைமை குறித்து சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடியிருந்தார்.

இதனையடுத்து, ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட குழு நேற்று விசேட உலங்கு வானூர்தியில் திருமலைக்கு வருகைதந்தது. இந்தக் குழுவினருடன் இரா. சம்பந்தனும் திரும்பி, நேற்றைய உயர்மட்ட மாநாட்டில் பங்குபற்றியதையடுத்தே மேற்படி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10)

# யாழ்ப்பாணம்...

அத்தகைய கொடியவர்களின் அத்துமீறல் செயற்பாடுகளை அகிம்சை வழியில் எதிர்க்கும் நோக்கத்துடன், நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாளை அத்தியாவசிய தேவைகளுக்கு இடையூறு ஏற்படாதவகையில் ஹர்த்தால் அனுஷ்டிப்பதுடன், வீதிகளில் ரயர் போட்டு எரிப்பதைதவிர்க்குமாறு தமிழ்த் தேசிய மாணவர் மன்றம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை கிளிநொச்சியில் ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வர்த்தக நிலையங்கள், பஸ் நிலையங்கள், அலுவலகங்கள் அனைத்தையும் மூடி தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு எழுச்சியை ஏற்படுத்துவோம் என கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் மீதான இனக்கலவர...

இதில் நாம் முக்கியமாக வலியுறுத்திய விடயம் - கடந்த 3 வருட யுத்தநிறுத்த உடன்பாட்டிலும் சரி, சமாதான முன்னெடுப்புக்களிலும் சரி எங்களுடைய மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை.

இவை மக்கள் மத்தியில் விரக்தி நிலையையும் நம்பிக்கையீனத்தையும் தோற்றுவித்துள்ளது. இந்தநிலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. மக்கள் கொந்தளிப்பு நிலையை அடைந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டினோம்.

அண்மைக் காலத்தில் நடைபெறுகின்ற யுத்தநிறுத்த மீறல்களில் சிறிலங்கா படையினரும் படையினரோடு இணைந்து இயங்குகின்ற ஆயுதக்குழுக்களும் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளால் யுத்தநிறுத்த சூழலே முழுஅளவில் கேள்விக்குறியாகியுள்ளது.

இதனைவிட அண்மைக்காலத்தில் எமது பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் கொல்லப்படுவதும் குறிப்பாக திருகோணமலையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்பாடுகள் - இனக்கலவரத்தைத் தூண்டும் முயற்சியாக அமைந்துள்ளது.

இதன்பின்னணியில் அரசும் அதன் படைகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் எமது மக்கள் மத்தியில் மதக்கலவரத்தைத் தூண்டி அதனோடு இனக்கலவரத்தைத் தூண்டும் நோக்கோடு தான் இத்தகைய செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் கொந்தளிப்பை எவராலும்சமாளிக்க முடியாது.

எல்லாப் பிரதேசங்களிலுமே மதக் கலவரமும் இனக்கலவரமும் பரவக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது என்பது பற்றியும் இந்தச் சந்திப்பில் விளக்கியுள்ளோம்.

அத்துடன் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கையும் இழுத்தடிப்பு நிலைப்பாட்டையும் விளக்கினோம்.

ஏனெனில் சுனாமி ஏற்பட்டு ஐந்து மாதங்கள் நிறைவடையும் நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித உதவிகளும் கிடைக்காததும் ஏற்கனவே 20 வருடகாலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்த மக்களுக்கு எதுவித உதவிகளும் கிடைக்காத நிலையில் மக்கள் ஏமாற்றமடைந்த நிலையிலும் சலிப்படைந்த நிலையிலும் பேரழிவு ஏற்பட்ட பின்னரும் எதுவித தீர்வுமில்லாத நிலையிலும் முழுஅளவில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர் என்பதையும் இந்தச் சந்திப்பில் எடுத்துரைத்தோம்.

அரசின் இந்தப் போக்குத் தொடருமானால் எங்கள் மக்களின் கொந்தளிப்பை எவராலும் சமாளிக்க முடியாது என்பதையும் இன்றைய சந்திப்பில் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைத்துள்ளோம். அண்மை நாட்களாக அரச படைகளும் சிங்கள இனவாதிகளும் மீண்டும் தமிழ்மக்கள் மத்தியில் இனக்கலவரத்தைத் தூண்டிவிடும் செயலோடு இறங்கியுள்ளன.

தமிழர் தாயகப் பிரதேசத்தை சிங்கள மயப்படுத்தும் சிங்கள ஆக்கிரமிப்பைத் தொடர்கின்ற குறியீடாக புத்தர்சிலைகளைக் கொண்டுவந்து பல்லின மக்கள் வாழ்கின்ற இடங்களில் நிறுவுவதும் மக்களின் உணர்வுகளை சிதறடித்து விடுவதும் கலவரத்தைத் தூண்டிவிடும் நோக்கோடு இடம்பெறுகின்ற செயற்பாடுகள்.

முன்பு எப்படி சிங்களப் பேரினவாதிகள் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்தார்களோ அல்லது சிங்கள மயமாக்க முனைந்தார்களோ அதனுடைய தொடர்சியான - முற்றுமுழுதான வெளிபாடே இது.

தற்போது வெளிப்படையாகச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள் இது மிக ஆபத்தான சூழலை நாடு பூராவும் ஏற்படுத்தப்போகிறது. இப்போது ஏற்பட்டுள்ளது நெருக்கடியான நிலையென்றே என்னால் கூறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வீரகேசரி...

அந்தக் கடிதத்தில் -

சிவராம் கடத்திக் கொல்லப்பட்டபோது அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் தேவராஜ் இருந்தார்.

சிவராம் கொல்லப்பட்டு இரு நாட்களுக்குப் பிறகு தேவராஜின் வீட்டுக்கு வந்த தொலைபேசி அழைப்பை அவரது மருமகள் எடுத்துள்ளார். அப்போது அடுத்து தேவராஜ் கொல்லப்படுவார் என மறுமுனையில் பேசிய நபர் எச்சரித்தாராம். இதனை கடந்த முதலாம் திகதி வீடு திரும்பிய தேவராஜிடம் அவரது மருமகள் தெரிவித்துள்ளார்.

சிவராமின் வீட்டுக்கு தேவராஜ் அஞ்சலி செலுத்தச் சென்றிருந்த ஆறு மணிநேரமும் அவர் சந்தேகத்திற்குரியதான சாம்பல் நிற வாகனத்தை அவதானித்துள்ளார். இதே மாதிரியான வாகனம்தான் சிவராமை கடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இரவு வீட்டுக்குத் திரும்பிய தேவராஜ், நள்ளிரவு சத்தம் கேட்டு எழுந்துபார்த்தபோது அதே சாம்பல் நிற வாகனம் அவரது இல்லத்திலிருந்து சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

அதற்கடுத்த நாள் இனந்தெரியாத நபர்களிடமிருந்து தொலைபேசி மூலமாக அவரது அலுவலகத்துக்கு தொடர்ச்சியாக கொலை அச்சுறுத்தல்கள் வந்துகொண்டிருந்தன.

இந்த நிலையில் தேவராஜ் கடந்த 5 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கனடா சென்றிருந்தார். தற்போது கொழும்பு திரும்பியுள்ள அவருக்கு இதுவரை எவ்வித அச்சுறுத்தல்களும் வரவில்லை.

உடனடியாக தேவராஜுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு...

மாணவர் பேரவை நடவடிக்கைகளில் ஈர்க்கப்பட்ட இவர் 1983 களில் புளொட் அமைப்பில் இணைந்து 1986 இன் பிற்பகுதிவரை அந்த அமைப்பின் உறுப்பினராகத் தொழிற்பட்டவர்.

1987 களில் ஈ.என்.டி.எல்.எவ் வின் உறுப்பினராக இணைந்த இவர், முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக மாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் ஈ.என்.டி.எல்.எவ். சார்பான உறுப்பினராகத் தொழிற்பட்ட அவர் மாகாணசபை செயலிழந்தவேளை 1989 களில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து 1993 வரை அங்கே தங்கியிருந்து 1993 களின் பிற்பகுதியில் நாடுதிரும்பிய இவர் 1994 இல் திருமலை நகரசபைத் தலைவராகத் தெரிவானார். நகரசபை கலைக்கப்படும் வரை அந்தப் பொறுப்பை வகித்தவர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.